
# ஜீவ நதி

தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி (வெளி. 22:1)

JULY 2026



SHARJAH TAMIL CONGREGATION (CSI KANYAKUMARI DIOCESE)

Private circulation only.

ஷார்ஜா தமிழ் திருச்சபை - கன்னியாகுமரி பேராயம்
SHARJAH TAMIL CONGREGATION - KANYAKUMARI DIOCESE

# ஜீவநதி

## ஜூலை 2026 - இதழ் 227

**"சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்."**
**சங்கீதம் 46:7**

SHARJAH TAMIL CONGREGATION
(CSI KANYAKUMARI DIOCESE)
P.O.Box : 46121, Sharjah, U.A.E. Tel. / Fax : 06-5680727, Mobile : 050-9367576

For private circulation only

# அனுதின மன்னா

**உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம். (யோவான் 17:17)**

| தேதி | நாள் | காலை | மனன வசனம் | அதிகாரம் | மாலை |
|---|---|---|---|---|---|
| 1 | புத | யோவா. 1:43-51 | அதற்கு ... என்றான் | 1:49 | நியா 6:1-14 |
| 2 | வியா | 1கொரி. 6:11-20 | கிரயத்துக்கு ... மகிமைப்படுத்துங்கள் | 6:20 | அப். 9:1-8 |
| 3 | வெள் | மாற். 10:46-52 | இயேசு ... பின்சென்றான் | 10:52 | 2இரா. 20:1-6 |
| 4 | சனி | யோவா. 6:56-69 | சீமோன் ... உண்டே | 6:68 | அப். 28:1-6 |
| 5 | ஞா | யாத். 35:30-35 | பின்பு ... செய்யவும் | 35:30,31 | பிலி. 4:10-20 |
| 6 | திங் | யாத். 31:4-6 | மற்றும் ... நிரப்பினேன் | 31:5 | 1 பேது. 4:7-11 |
| 7 | செவ் | யாத். 31:1-6 | மேலும்தான் ... செய்வார்கள் | 31:5 | யாத். 18:13-27 |
| 8 | புத | யாத். 31:7-11 | நான் உனக்கு ... என்றார் | 31:11 | ரோம. 14:1-12 |
| 9 | வியா | கொலோ. 3:23-24 | நீங்கள் ... அறிந்து | 3:23 | 2தெச. 3:6-12 |
| 10 | வெள் | லூக். 17:1-10 | அப்படியே ... என்றார் | 17:10 | 1கொரி. 4:1-5 |
| 11 | சனி | சங். 104:20-35 | பாலசிங்கங்கள் ... தேடும் | 104:21 | 1பேது. 2:13-17 |
| 12 | ஞா | மத். 13:16-23 | அவரோ ... என்றார் | 13:23 | யோசு. 1:1-9 |
| 13 | திங் | நெகே. 8:1-10 | கர்த்தருக்குள் ... என்றான் | 8:10(b) | 1 தீமோ. 1:3-11 |
| 14 | செவ் | நெகே. 8:1-10 | அவர்கள் ... விளங்கப்பண்ணினார்கள் | 8:8 | கொலோ. 2:6-19 |
| 15 | புத | நெகே. 8:10 | தண்ணீர் ... செவிகொடுத்தார்கள் | 8:3 | அப். 17:16-31 |
| 16 | வியா | சங். 1 | துன்மார்க்கருடைய் ... பாக்கியவான் | 1:1,2 | உபா. 4:1-14 |
| 17 | வெள் | சங். 1 | அவன் நீர்க்கால்களின் ... வாய்க்கும் | 1:3 | பிலி. 4:1-7 |
| 18 | சனி | மத். 13:18-23 | நல்லநிலத்தில் ... என்றார் | 13:23 | எபே. 4:1-16 |
| 19 | ஞா | மத். 20:25-34 | உங்களுக்குள்ளே ... பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன் | 20:26,27 | மத். 16:13-20 |
| 20 | திங் | எரே. 1:1-8 | நான் உன்னை ... சொன்னார் | 1:5 | எரே. 1:4-19 |
| 21 | செவ் | எரே. 1:9-15 | பார் ... சொன்னார் | 1:10 | யோவா. 21:15-19 |
| 22 | புத | எரே. 1:16-19 | இதோ ... அலங்கமும் ஆக்கினேன் | 1:18 | யோவா. 17:15-19 |
| 23 | வியா | சங். 132:1-18 | இது ... வாசம்பண்ணுவேன் | 132:14 | நியா. 6:1-14 |
| 24 | வெள் | 1பேது. 5:1-4 | உங்களிலுள்ள ... புத்திசொல்லுகிறதென்னவென்றால் | 5:1 | யாத். 3:1-12 |
| 25 | சனி | மத். 20:25-34 | உங்களுக்குள்ளே ... பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன் | 20:26,27 | அப். 9:1-8 |
| 26 | ஞா | பிர. 4:7-16 | ஒண்டியாயிருப்பதிலும் ... பலனுண்டாகும் | 4:9 | எபே. 5:21-33 |
| 27 | திங் | மத். 19:1-6 | இப்படி ... என்றார் | 19:6 | 1யோவா. 3:11-18 |
| 28 | செவ் | எபே. 5:21-33 | தெய்வ ... கீழ்படிந்திருங்கள் | 5:21 | எபே. 4:29-32 |
| 29 | புத | எபே. 5:21-33 | தன் சொந்த ... காப்பாற்றுகிறான் | 5:29 | யோசு. 24:14-18 |
| 30 | வியா | சங். 128 | கர்த்தர் ... காண்பாய் | 128:5 | கலா. 5:13-24 |
| 31 | வெள் | சங். 128 | கர்த்தருக்குக் ... அவன் பாக்கியவான் | 128:1 | மாற். 10:1-9 |

# சபை ஆயரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய மாதத்தில் பிரவேசிக்க ஆண்டவர் அருளிய கிருபைக்காகவும், இந்த ஆயர் மடல் வழியாக மீண்டும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பிற்காகவும், தேவனுக்கு மனமார்ந்த நன்றி மற்றும் துதி செலுத்துகிறேன்.

இந்த ஆண்டின் கோடை காலத்தின் தொடக்கத்திலேயே வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருப்பதை நாம் காண்கிறோம். சில நேரங்களில் இது நமக்கு கவலையை ஏற்படுத்தலாம். இருப்பினும், எல்லா நேரங்களிலும் நம்மோடு இருக்கும் ஆண்டவர், தேவையான எல்லா கிருபைகளையும் அருளி, நம்முடைய போக்கிலும் வரத்திலும் நம்மைக் காத்தருளுவார் என்ற உறுதியான விசுவாசத்தோடு முன்னேறுவோம்.

நம்முடைய திருச்சபையை ஆண்டவர் அதிசயமான முறையில் வழிநடத்தி வருகிறார். ஆராதனைகள், ஜெபக் கூட்டங்கள், வீட்டுக்கூட்டங்கள், ஜூனியர் சர்ச், பெண்கள் ஐக்கிய சங்கம், பாடகர் குழு, தனிநபர் சந்திப்புகள் என ஒவ்வொரு திருப்பணியும் தேவனுடைய கிருபையால் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. திருச்சபையின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக தொடர்ந்து ஜெபிக்கவும், அன்போடும் ஐக்கியத்தோடும் திருப்பணிகளில் உங்களை அர்ப்பணிக்கவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய பிள்ளைகளுக்கு கோடை விடுமுறை தொடங்கியுள்ளது. இந்த விடுமுறை அவர்களுக்கு பயனுள்ளதாயும், ஆசீர்வாதமுள்ளதாயும் அமைய என் வாழ்த்துகள். மேலும், நம்முடைய திருச்சபையின் சில விசுவாசிகள் இந்தியாவிற்கு பயணம் செய்யத் தொடங்கியுள்ளார்கள். சிலர் அதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பயணங்கள் பாதுகாப்பாகவும், சொந்த ஊரில் அவர்கள் செலவிடும் நாட்கள் மகிழ்ச்சியும் சமாதானமும் நிறைந்ததாகவும் அமைய ஆண்டவர் அருள் புரிவாராக.

நம்முடைய திருச்சபையின் இந்த ஆண்டுக்கான Harvest Festival அக்டோபர் மாதம் 11-ம் தேதியும், கிறிஸ்துமஸ் சிறப்பு நிகழ்ச்சி டிசம்பர் மாதம் 6-ம் தேதியும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகையால், நம்முடைய திருச்சபையின் ஒவ்வொரு குடும்பமும் இந்த முக்கிய நிகழ்வுகளில் பங்கேற்கும் வகையில், தங்களுடைய பணிகள் மற்றும் பயணத் திட்டங்களை முன்கூட்டியே அமைத்துக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

மேலும், இந்த கோடை விடுமுறையில் நம்முடைய திருச்சபையின் VBS (Vacation Bible School) ஜூலை 10, 11, 13 ஆகிய நாட்களில், தினமும் மாலை 4.00 மணி முதல் Union Church-இல் நடைபெற உள்ளது. ஆகவே, ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் இதில் ஆர்வத்துடன் பங்கேற்கத் தேவையான ஆயத்தங்களைச் செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய ஜீவநதி மாத இதழை தொடர்ந்து வாசித்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். திருமறை வினாடி வினா போட்டிகளில் பங்கேற்று, வேதாகம அறிவில் வளர முயற்சி செய்யுங்கள். இந்த மாதம் முதல் பிள்ளைகளுக்காக ஆங்கிலப் பகுதிகளும் கூடுதலாக இணைக்கப்பட்டுள்ளன. அவற்றை அவர்கள் வாசித்து பயனடைய பெற்றோர்கள் உற்சாகப்படுத்துங்கள்.

இம்மாத வாக்குத்தத்தம்:

**“சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்.”– சங்கீதம் 46:7**

தேவன் நம்மோடு இருப்பதால் எந்தச் சூழ்நிலையிலும் நாம் அஞ்சத் தேவையில்லை. “சேனைகளின் கர்த்தர்” என்பது எல்லாவல்லமைகளுக்கும் அதிகாரமுள்ள தேவனைச் சுட்டிக்காட்டுகிறது. “யாக்கோபின் தேவன்” என்பது தமது உடன்படிக்கையில் உண்மையுள்ளவராகவும், தம் மக்களை ஒருபோதும் கைவிடாதவராகவும் இருக்கும் தேவனை நினைவூட்டுகிறது. “உயர்ந்த அடைக்கலம்” என்பது ஆபத்து, பயம், துன்பம் போன்ற எல்லாச் சூழ்நிலைகளிலும் பாதுகாப்பளிக்கும் உறுதியான புகலிடத்தைக் குறிக்கிறது.

இந்த உலகத்தின் சோதனைகளும் தீமைகளும் நம்மைச் சூழ்ந்தாலும், ஆண்டவர் எல்லாவற்றிலிருந்தும் நம்மைக் காத்து பாதுகாக்க வல்லவர் என்ற உறுதியான நம்பிக்கையோடு வாழ்வோம். இந்த புதிய ஜூலை மாதத்திலும் ஆண்டவர் தாமே உங்கள் அனைவரையும் பாதுகாத்து, ஆசீர்வதித்து, வழிநடத்துவாராக.

**ஜெபங்களுடன்,**
**கிறிஸ்துவின் திருப்பணியில்**
**Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்**
**சபை ஆயர் மற்றும் குடும்பத்தினர்.**

# அருளுரைப்பகுதி

## "சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்"

**"சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்." (சங்கீதம் 46:7)**

மனித வாழ்க்கை போராட்டங்கள் நிறைந்தது. குடும்பப் பிரச்சினைகள், நோய்கள், பொருளாதார நெருக்கடிகள், எதிர்ப்புகள், பயம், கவலை போன்ற பல சவால்களை நாம் சந்திக்கிறோம். இந்த சூழ்நிலைகளில் தேவனுடைய பிள்ளைகள் கேட்கும் முக்கியமான கேள்வி: "நான் தனியாக இருக்கிறேனா?" என்பதாகும். இந்த சங்கீதம் அதற்கான விடையை நமக்கு தருகின்றது. **"சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்."** மேலும் இந்த சங்கீதம் தேவனுடைய பாதுகாப்பு, வல்லமை, மற்றும் பிரசன்னத்தைப் பற்றிய மகத்தான சங்கீதமாகும். இந்த சங்கீதம் கோராகின் புத்திரர்களால் எழுதப்பட்டது. இஸ்ரவேல் ஜனங்கள் எதிரிகளால் சூழப்பட்டிருந்த காலங்களில், தேவன் தம்முடைய ஜனங்களோடு இருந்து அவர்களை விடுவித்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பாடல் எழுதப்பட்டதாக திருமறை அறிஞர்கள் கருதுகின்றனர். "சேனைகளின் கர்த்தர்" என்ற பெயர் தேவன் பரலோக சேனைகளின் தலைவராக இருப்பதை வெளிப்படுத்துகிறது. "யாக்கோபின் தேவன்" என்பது பலவீனமான மனிதர்களுக்கும் உண்மையாய் இருப்பவராக தேவனை சுட்டிக்காட்டுகிறது. மேலும் இந்த வசனம் தேவனுடைய பிரசன்னத்தையும், பாதுகாப்பையும், வெற்றியையும் நமக்கு நினைவூட்டுகிறது.

### 1. நம்மோடு இருக்கும் ஆண்டவர் பெரியவர்

"சேனைகளின் கர்த்தர்" (Lord of Hosts) என்ற பெயர் வேதாகமத்தில் பலமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது பரலோக சேனைகள், தூதர் கூட்டங்கள் மற்றும் சகல வல்லமைகளுக்கும் ஆண்டவராக இருக்கும் தேவனைக் குறிக்கிறது.

மத்தேயு ஹென்றி (Matthew Henry) திருமறை அறிஞர் கூறும்போது "சேனைகளின் கர்த்தர் என்பது தேவன் அனைத்து வல்லமைகளுக்கும் தலைவராக இருப்பதை வெளிப்படுத்துகிறது. மேலும் அவருக்கு எதிராக நிற்கும் எந்த சக்தியும் வெற்றி பெற முடியாது." என்கிறார்.

சார்லஸ் ஸ்பர்ஜன் (Charles Spurgeon) தன் எழுத்துக்களில் “தேவனுடைய மக்கள் சிறியவர்களாகத் தோன்றலாம், ஆனால் அவர்கள் பக்கத்தில் நிற்பவர் பரலோக சேனைகளின் தலைவரே.” நமது பிரச்சினைகள் பெரியதாக இருக்கலாம், ஆனால் நம்மோடு இருப்பவர் அதைவிட பெரியவர் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். விசுவாசியின் மிகப்பெரிய பலம் தேவன் நம்மோடு இருப்பதே.

எலிசாவின் வேலைக்காரன் எதிரிகளின் படையைப் பார்த்து பயந்தபோது, எலிசா, **“நம்மோடிருக்கிறவர்கள் அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் அதிகம்”** என்றார் (2 இராஜாக்கள் 6:16). பின்னர் தேவன் அவனுடைய கண்களைத் திறந்தபோது, அக்கினி ரதங்களும் குதிரைகளும் மலையை நிரப்பியிருந்ததைப் பார்த்தான்.

நம்முடைய கண்களுக்கு பிரச்சினைகள் பெரிதாகத் தோன்றலாம். ஆனால் தேவன் நம்மோடு இருக்கும்போது எந்த எதிரியும் பெரியவன் அல்ல.

**2. நம்மோடு இருக்கும் அவருடைய பிரசன்னம் அற்புதமானது**

இந்த வசனத்தில் உள்ள மிகப் பெரிய ஆசீர்வாதம், தேவன் நமக்காக ஏதாவது செய்கிறார் என்பதல்ல, தேவ பிரசன்னம் நம்மோடு இருக்கிறது என்பதே. தேவன் நமக்கு பணம், பதவி, கல்வி, உடல்நலம், குடும்ப ஆசீர்வாதங்கள் போன்ற பல நன்மைகளைக் கொடுக்கிறார். இவை அனைத்தும் தேவனுடைய கிருபையின் வெளிப்பாடுகளே. ஆனால் இவற்றையெல்லாம் விட மேலான ஆசீர்வாதம் அவருடைய பிரசன்னம் (சமூகம்) ஆகும். ஏனெனில் பணம் ஒரு காலத்தில் குறையலாம், உடல்நலம் மாறலாம், பதவி நிலைத்திருக்காது. ஆனால் தேவனுடைய பிரசன்னம் நம்மோடு இருந்தால் எந்த சூழ்நிலையிலும் நாம் நிலைத்திருக்க முடியும்.

இதைத்தான் மோசே நன்றாகப் புரிந்துகொண்டார். யாத்திராகமம் 33:15-ல் அவர் தேவனிடம், **“உம்முடைய சமூகம் என்னோடே செல்லாவிட்டால் எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோக வேண்டாம்”** என்று கூறுகிறார். கானான் தேசம் பாலும் தேனும் ஓடும் வளமான தேசமாக இருந்தது. ஆனால் மோசே, “தேசம் கிடைத்தாலும் பரவாயில்லை, உமது பிரசன்னம் இல்லாமல் நான் செல்ல விரும்பவில்லை” என்று கூறினார். மோசேக்கு தேவன் கொடுக்கும் ஆசீர்வாதங்களை விட, தேவ வசனமே அவருக்கு முக்கியமாக இருந்தது.

ஒருவர் நல்ல சம்பளமுள்ள வேலையில் இருக்கலாம். வீடு, வாகனம், வசதிகள் எல்லாம் இருக்கலாம். ஆனால் உள்ளத்தில் அமைதி இல்லையென்றால் அவர் சந்தோஷமாக வாழ முடியாது. மற்றொருவர் குறைந்த வசதிகளில் இருந்தாலும், தேவனுடைய சமாதானத்தையும் பிரசன்னத்தையும் அனுபவித்தால் மகிழ்ச்சியாக வாழ முடியும். காரணம், உண்மையான பாதுகாப்பு சூழ்நிலைகளில் இல்லை, தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கிறது. இன்று பலர் தேவனிடம், "ஆண்டவரே, எனக்கு வேலை கொடுங்கள், உடல்நலம் கொடுங்கள், பிரச்சினையை தீருங்கள்" என்று ஜெபிக்கிறார்கள். இவை தேவையான ஜெபங்களே. ஆனால் அதைவிட உயர்ந்த ஜெபம்: "ஆண்டவரே, நான் எங்கு சென்றாலும் நீர் என்னோடு இருங்கள். உமது பிரசன்னத்தை இழக்க விரும்பவில்லை." என்பதாகும். தேவனுடைய பிரசன்னம் இருக்கும்போது பயம் தைரியமாக மாறுகிறது, கவலை சமாதானமாக மாறுகிறது, பலவீனம் பலமாக மாறுகிறது, தனிமை ஆறுதலாக மாறுகிறது.

ஜான் ஸ்டாட் (John Stott) கிறிஸ்துவின் பிரசன்னத்தை பற்றி கூறும்போது "கிறிஸ்தவ வாழ்க்கையின் மையம் கிறிஸ்துவின் தொடர்ச்சியான பிரசன்னமே." என்று கூறுகிறார்.

### 3. நம்மோடு இருக்கும் ஆண்டவர் அடைக்கலம் தருகின்றார்

"அடைக்கலம்" என்ற வார்த்தை கோட்டை, பாதுகாப்பு, அரண், புகலிடம் என்பதைக் குறிக்கிறது. எருசலேம் நகரம் பலமான மதில்களால் சூழப்பட்டிருந்தது. எதிரிகள் வந்தாலும் மக்கள் அந்தக் கோட்டைக்குள் பாதுகாப்பாக இருந்தனர். அதுபோல தேவன் தமது ஜனங்களுக்கு ஆன்மீகக் கோட்டையாக இருக்கிறார் என்கிறார்.

செனெகெரிப் ராஜா எருசலேமை முற்றுகையிட்டபோது, எசேக்கியா தேவனை நோக்கி ஜெபித்தான். ஒரே இரவில் தேவதூதன் அசீரிய படையை அழித்தான் (2 இராஜாக்கள் 19). நகரத்தை காப்பாற்றியது மனித பலம் அல்ல, தேவனுடைய பாதுகாப்பே. உலகத்தின் பாதுகாப்புகள் தோல்வியடையலாம், ஆனால் தேவனுடைய அடைக்கலம் ஒருபோதும் தோல்வியடையாது. சங்கீதக்காரன் "ஆபிரகாமின் தேவன்" என்று சொல்லவில்லை. "யாக்கோபின் தேவன்" என்று குறிப்பிடுகிறார். யாக்கோபு பரிபூரணமான மனிதன் அல்ல, பல தவறுகள் செய்தவன். இருந்தாலும் தேவன் அவனை விட்டு விலகவில்லை. ஏனெனில் இந்தப் பெயர் தேவனுடைய கிருபையை வெளிப்படுத்துகிறது.

தோல்வியடைந்தவர்களுக்கும், பலவீனமானவர்களுக்கும், விழுந்து போனவர்களுக்கும் அவர் தேவனாக இருக்கிறார்.

ஜான் கால்வின் (John Calvin) கூறுகிறார் "யாக்கோபின் தேவன் என்ற பெயர் மனிதனின் தகுதியை அல்ல, தேவனுடைய கிருபையை முன்னிறுத்துகிறது."

நாம் பலவீனமாக இருந்தாலும், தேவன் நம்மை கைவிடமாட்டார். "உயர்ந்த அடைக்கலம்" என்பது பகைவர்கள் எட்ட முடியாத பாதுகாப்பான இடத்தைக் குறிக்கிறது. தாவீது தன்னுடைய வாழ்வில் சவுல் தன்னை கொல்லத் தேடியபோது தாவீது தேவனை அடைக்கலமாகக் கொண்டான்.

**சங்கீதம் 18:2: "கர்த்தர் என் கன்மலையும் என் கோட்டையும் என் இரட்சகருமாயிருக்கிறார்."**

மார்ட்டின் லூத்தர் (Martin Luther) இந்த சங்கீதத்தால் மிகவும் ஊக்கமடைந்தார். இதனை அடிப்படையாகக் கொண்டு "A Mighty Fortress Is Our God" என்ற புகழ்பெற்ற பாடலை எழுதினார். அவர் கூறினார்: "நமது கோட்டை தேவன், எதிரிகள் எவ்வளவு பலமாக இருந்தாலும் அவர் நம்மை காத்துக்கொள்வார்." என்கிறார். அன்று இஸ்ரவேல் மக்கள் வாழ்வில் உடன் இருந்தவர் இன்று இமானுவேலராக நம்மோடு இருக்கிறார். மத்தேயு 28:20 **"இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்."** இயேசு தனது சீஷர்களுக்கு தனிமையை அல்ல, தனது பிரசன்னத்தை வாக்குத்தத்தமாகக் கொடுத்தார். சங்கீதம் 46:7 என்பது வெறும் ஆறுதல் வசனம் மட்டுமல்ல, அது விசுவாசியின் வெற்றிக் கோஷமாகும். நாம் தனியாக இல்லை.

நம்மோடு சேனைகளின் கர்த்தர் இருக்கிறார். நமக்கு எதிராக ஆயிரம் பேர் எழுந்தாலும், நம்மைச் சுற்றி புயல்கள் வீசியாலும், நம் வாழ்க்கையில் சோதனைகள் வந்தாலும், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமாக இருக்கிறார். எனவே இன்று நாம் தைரியமாக அறிவிப்போம்: **"சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்!"**
ஆமென்.

**கிறிஸ்துவின் திருப்பணியில்**
**Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்**
**சபை ஆயர்**

# செயலர் மடல்

***“கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள், நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள்” (ஓசியா 13:9)***

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில், விசுவாசிகள் யாவருக்கும் சபைகுழு சார்பில் அன்பின் நல்வாழ்த்துக்கள். இந்த 2026-ம் ஆண்டில் கடந்த ஆறு மாதங்களாக நம் ஒவ்வொருவரையும் அற்புதமாக வழிநடத்தி, நம் திருச்சபையின் ஊழியங்களையும் ஆசீர்வாதமாய் நடத்த கிருபை புரிந்து வருகிற நமது தேவாதி தேவனுக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம்.

இந்த வருடம் கோடைகால விடுமுறை நாட்களில், நமது திருச்சபையின் Junior Church பிள்ளைகள் பயனடையும் வண்ணம், இந்த மாதம் 10,11,12,13 ஆகிய நாட்களில், நம்முடைய வழக்கமான ஆராதனைகள் நடைபெறுகிறதான Union Church Campus -ல் வைத்து VBS நிகழ்வுகள் நடைபெற இருக்கிறது. நமது பேராயத்தின் இந்தவருட VBS theme ஆன COME AND SEE, என்ற நோக்கத்தின் அடிப்படையில் இது நடைபெறும். பெற்றோர்கள் உற்சாகமாய் பிள்ளைகளை பங்குபெற செய்யவும், ஜீனியர் சர்ச் பொறுப்பாளர்கள், ஆசிரியர்கள் உற்சாகமாக தேவநாம மகிமைக்காக இந்த ஊழியத்தை செய்யவும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இந்த நற்பணியை நிறைவேற்றயிருக்கிற VBS - Directors, பொறுப்பாளர்கள், ஆசிரியர்கள், பங்குபெற இருக்கிற பிள்ளைகள், அதற்கான ஆயத்தங்கள் ஒவ்வொன்றுக்காகவும் விசுவாசிகள் யாவரும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

ஷார்ஜா, சஜா பகுதியில், ஷார்ஜாவில் நமது தேவனை ஆராதிக்கிறவர்களின் பயன்பாட்டிற்காக Sharjah Christian Cemetery Chapel கடந்த மாதம் முதல் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. கிறிஸ்தவ

சமூகத்தினருக்கு பல நிலைகளிளில் உதவிவருகிறதான Sharjah Ruler அவர்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

நம்முடைய விசுவாசிகளில் பலர் இந்த வருட கோடை விடுமுறை நாட்களில் இந்தியா செல்கின்றார்கள். அவர்களின் பயணங்கள் இனிதாய் அமைந்திடவும், விடுமுறை நாட்கள் மகிழ்ச்சியும், ஆசீர்வாதமுமாய் காணப்பட தேவன் அருள்புரிவாராக!

இந்த வருடம் நமது திருச்சபையின் சிறப்பு நிகழ்வுகளான அறுப்பின் பண்டிகை அக்டோபர் 11-ஆம் நாள், கிறிஸ்து பிறப்பு சிறப்பு நிகழ்வுகள் டிசம்பர் 6-ஆம் நாள் நடத்த தீர்மானித்துள்ளோம். இந்த நாட்களில் ஒவ்வொருவரும் பங்குபெற்று சிறப்பிக்கும் வண்ணம், உங்கள் விடுமுறை நாட்களை அமைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த சிறப்பு நிகழ்வுகள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நமது திருச்சபையின் ஆராதனைகளில் புதிதாக பங்கேற்று வரும் தனிநபர்கள் மற்றும் குடும்பத்தினர்களுக்கு நன்றி கூறிக்கொள்வதோடு இவர்களுக்காய் ஆண்டவரை துதிக்கிறேன். புதிய அங்கத்தினர்களை உற்சாகப்படுத்தி ஆராதனையில் பங்கேற்க செய்யும் ஒவ்வொருவரையும் பாராட்டி நன்றி கூறுகிறேன். தொடர்ந்து திருச்சபையின் அனைத்து ஊழியங்களிலும் உற்சாகமாய் பங்கேற்போம், திருச்சபையின் வளர்ச்சிக்காயும் இறைமக்களின் ஆசீர்வாதத்திற்காயும் ஊக்கமாய் ஜெபிப்போம், நமது தேவனின் ஆசீர்வாதங்களை சொந்தமாக்குவோம்!

கர்த்தர் தாமே, நம் அனைவரையும் ஆசீர்வாதமாக நடத்துவாராக ஆமென்.

**சபைக்குழு சார்பில்,**

**K. அருண்குமார் - செயலாளர்.**

# ஆண்கள் பகுதி

## சாட்சி நிறைந்த வாழ்வு வாழ்ந்த பர்னபா

வேதாகமத்தில் பலருடைய வாழ்க்கைகள் நமக்கு முன்மாதிரியாக இருக்கின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்க ஒருவர் பர்ணபா. அவருடைய இயற்பெயர் யோசே. அப்போஸ்தலர்கள் அவருக்கு **"பர்னபா"** என்று பெயரிட்டனர். பர்ணபா என்றால் **"ஆறுதலின் மகன்"** அல்லது **"உற்சாகத்தின் மகன்"** என்று பொருள். அவர் தன்னுடைய வார்த்தைகளாலும் செயல்களாலும் பலருக்கு ஆறுதலாகவும் உற்சாகமாகவும் இருந்தார். அதனால் அவரது வாழ்க்கை ஒரு சிறந்த கிறிஸ்தவ சாட்சியாக விளங்குகிறது.

**1. அறம் செய்யும் பண்பாளர்**

அப்போஸ்தலர் 4:32-37ல், பர்ணபா தன்னிடம் இருந்த நிலத்தை விற்று அதன் பணத்தை அப்போஸ்தலர்களிடம் ஒப்படைத்தார் என்று வாசிக்கிறோம். ஆரம்பகால திருச்சபையில் தேவையுள்ளவர்களுக்கு உதவுவதில் அவர் முன்னுதாரணமாக இருந்தார். அவர் தன்னிடம் இருந்ததை தனக்காக வைத்துக்கொள்ளாமல், தேவனுடைய மக்களின் நலனுக்காக அர்ப்பணித்தார். உண்மையான விசுவாசம் தாராள மனப்பான்மையிலும் அன்பின் செயல்களிலும் வெளிப்பட வேண்டும் என்பதை அவரது வாழ்க்கை கற்றுத்தருகிறது.

**2. நேர்நிலை சிந்தனையாளர்**

அப்போஸ்தலர் 9:26-27ல், சவுல் (பின்னர் பவுல்) மனந்திரும்பியபோது, எருசலேம் சீஷர்கள் அவரை நம்ப அஞ்சினர். ஆனால் பர்ணபா அவரை ஏற்றுக்கொண்டு அப்போஸ்தலர்களிடம் அறிமுகப்படுத்தினார். மற்றவர்கள் சந்தேகித்த இடத்தில், பர்ணபா தேவனுடைய கிரியையை கண்டார். அவர் மனிதர்களின் கடந்த காலத்தைப் பார்க்காமல், தேவன் அவர்களில் செய்யும் புதிய செயல்களைப் பார்த்தார். இது நேர்நிலை சிந்தனை மற்றும் ஆன்மீக பார்வையின் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**3. ஊக்குவிக்கும் பண்பாளர்**

அப்போஸ்தலர் 11:19-26ல், அந்தியோகியா திருச்சபையில் விசுவாசிகள் வளர்ந்தபோது, பர்ணபா அங்கு சென்று தேவனுடைய கிருபையைக் கண்டு மகிழ்ந்தார். அவர் அனைவரையும் கர்த்தருக்குள் நிலைத்திருக்க

ஊக்குவித்தார். மேலும், பவுலை அழைத்து வந்து அவருடன் இணைந்து ஊழியம் செய்தார். ஒரு நல்ல தலைவன் மற்றவர்களை வளரச் செய்வான். பர்ணபா அப்படிப்பட்ட ஊக்குவிக்கும் பண்பாளராக இருந்தார்.

**4. தலைமைப் பண்புக்கு இலக்கணமானவர்**

அப்போஸ்தலர் 13-ம் அதிகாரத்தில், பர்னபா மற்றும் பவுல் பரிசுத்த ஆவியினால் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல் மிஷனரி பயணத்திற்குப் புறப்பட்டனர். சுவிசேஷப் பணியில் அவர் முக்கிய தலைமைப் பொறுப்பை ஏற்றார். தேவனுடைய அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, சிரமங்களையும் எதிர்ப்புகளையும் சந்தித்தபோதிலும் உறுதியுடன் பணியாற்றினார். உண்மையான தலைமை என்பது அதிகாரம் செலுத்துவது அல்ல, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற தன்னை அர்ப்பணிப்பதாகும் என்பதை அவரது வாழ்க்கை காட்டுகிறது.

**5. மனதார மன்னிக்கும் பண்பாளர்**

அப்போஸ்தலர் 15:36-41-ல், மாற்கு என்பவரை மீண்டும் ஊழியத்திற்கு அழைத்துச் செல்லும் விஷயத்தில் பவுலுக்கும் பர்னபாவுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. மாற்கு முன்பு ஒரு பயணத்தில் அவர்களை விட்டு விலகிச் சென்றிருந்தாலும், பர்ணபா அவருக்கு இன்னொரு வாய்ப்பைக் கொடுக்க விரும்பினார். தோல்வியடைந்த ஒருவரையும் மீண்டும் எழுப்ப முடியும் என்ற நம்பிக்கையுடன் அவர் செயல்பட்டார். பின்னர் மாற்கு தேவனுடைய ஊழியத்தில் பயனுள்ள ஊழியக்காரனாக மாறினார். மன்னிப்பும் இரக்கமும் ஒரு மனிதனை மாற்றும் சக்தி உடையவை என்பதை பர்னபா நிரூபித்தார்.

பர்னபாவின் வாழ்க்கை ஒரு உண்மையான கிறிஸ்தவ சாட்சியாக விளங்குகிறது. அவர் தாராள மனப்பான்மை கொண்டவராகவும், நேர்நிலை சிந்தனையாளராகவும், பிறரை ஊக்குவிப்பவராகவும், சிறந்த தலைவராகவும், மனதார மன்னிப்பவராகவும் இருந்தார். இன்றைய ஆண்களாகிய நாம், பர்னபாவின் இந்த குணநலன்களை நம் வாழ்க்கையில் கடைப்பிடித்தால், குடும்பத்திலும், சபையிலும், சமுதாயத்திலும் நல்ல சாட்சிகளாக வாழ முடியும். நாமும் "ஆறுதலின் மகன்" என்று அழைக்கப்படத்தக்க வாழ்க்கையை வாழ தேவன் நமக்கு கிருபை செய்வாராக. ஆமென்.

**Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்**
**சபை ஆயர்**

# பெண்கள் பகுதி

## கர்த்தருக்குப் பயந்த தீமோத்தேயுவின் தாய் யூனிக்கே (Eunice)

**“உன்னிடத்திலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூருகிறேன், அந்த விசுவாசம் முதலில் உன் பாட்டியாகிய லோவிஸிடத்திலும், உன் தாயாகிய யூனிக்கேயிடத்திலும் இருந்தது.” (2 தீமோத்தேயு 1:5)**

ஒரு தாயின் ஜெபமும், விசுவாசமும், போதனையும் ஒரு தலைமுறையை மாற்றும் சக்தியுடையது. நமது வேதாகமத்தில் யூனிக்கே பற்றி அதிகமாக எழுதப்படவில்லை. ஆனால் அவர் வளர்த்த மகன் தீமோத்தேயு, பவுலின் அன்புக்குரிய ஊழியக்காரனாகவும், ஆரம்ப சபையின் தலைவர்களில் ஒருவராகவும் மாறினார். இதற்கு அவருடைய தாயின் பங்களிப்பு அதிகமாக இருந்ததை நாம் அறிந்து கொள்ள முடியும்.

இறையறிஞர் ஒருவர் கூறும்போது,
“பவுல் தீமோத்தேயுவை ஊழியக்காரனாக்கினார், ஆனால் யூனிக்கே அவனை தேவனுக்குப் பயப்படும் மனிதனாக உருவாக்கினார்.” என்கிறார்.

**1. யூனிக்கே கர்த்தருக்குப் பயந்த விசுவாசமுள்ள தாய் (2 தீமோத். 1:5)**
யூனிக்கேயின் விசுவாசம் வெளிப்புற மதச்சடங்கு அல்ல, அது “மாயமற்ற விசுவாசம்” என்று பவுல் குறிப்பிடுகிறார்.

கர்த்தருக்குப் பயப்படுதல் என்பது தேவனை மதிப்பதையும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிதலையும், பாவத்தை வெறுப்பதையும் மையப்படுத்துகின்றது. இன்றைய பெண்கள் குடும்பத்தில் தேவபயத்தை வளர்க்க வேண்டும். குழந்தைகள் நாம் சொல்வதைவிட நாம் வாழ்வதைப் பார்த்தே அதிகம் கற்றுக்கொள்கிறார்கள்.

**2. யூனிக்கே வேதத்தைப் போதித்த தாய் (2 தீமோத்தேயு 3:15)**
“நீ சிறுவயதுமுதல் வேதவாக்கியங்களை அறிந்திருக்கிறாய்.”

தீமோத்தேயு சிறுவயதிலிருந்தே வேதத்தை அறிந்திருந்தான். அவனுக்கு முதல் ஆசிரியர் யார்? அவனுடைய தாய் மற்றும் பாட்டி.

இன்றைய உலகில் குழந்தைகள் பலர் மொபைல் போனிலிருந்து கற்றுக்கொள்கிறார்கள். இணையத்திலிருந்து கற்றுக்கொள்கிறார்கள். ஆனால் தேவனுடைய வார்த்தையை வீட்டில் கற்றுக்கொடுப்பது தாயின் பெரிய பொறுப்பாகும். நம்முடைய வாழ்வில் காணப்படும் தினசரி குடும்ப ஜெபம், வேதாகம வாசிப்பு, பிள்ளைகளுக்கு வேதாகமக் கதைகள் சொல்லுதல் போன்றவை அவர்களின் எதிர்கால தலைமுறையை காக்கும்.

இறையறிஞர் கருத்து Charles Spurgeon கூறுகிறார்:
“ஒரு தாயின் முழங்காலில் கற்றுக்கொண்ட ஜெபம் வாழ்நாள் முழுவதும் மனிதனை விட்டு அகலாது.”

**3. யூனிக்கே தேவனுக்கு பயன்படும் மகனை உருவாக்கினாள் (அப்.16:1-3)**
தீமோத்தேயு ஒரு சிறந்த ஊழியக்காரனாக வளர்ந்தான். பவுல் அவனை தனது ஆவிக்குரிய மகனாக அழைத்தார்.

தீமோத்தேயுவின் வெற்றியின் பின்னால் ஒரு ஜெபிக்கும் தாயும் ஒரு விசுவாசமுள்ள பாட்டியும் மற்றும் ஒரு தேவபயமுள்ள குடும்பம் இருந்ததையும் நாம் அறிந்து கொள்ள முடியும்.

அன்புக்குரியவர்களே நம்முடைய பிள்ளைகள் மருத்துவர் ஆக வேண்டும் பொறியாளர் ஆக வேண்டும் என்று ஜெபிப்பதோடு, நின்றுவிடாமல் “கர்த்தருக்குப் பயன்படும் மனிதராக இருக்க வேண்டும்” என்றும் ஜெபிக்க அழைக்கப்படுகின்றோம்.

இறையறிஞர் கருத்து Matthew Henry கூறுகிறார்:
“தேவபக்தியுள்ள தாயின் தாக்கம், அவள் இறந்த பின்னும் தலைமுறைகளில் தொடர்கிறது.”

**4. யூனிக்கே குடும்பத்தில் ஆன்மீக பாரம்பரியத்தை உருவாக்கினாள்**
லோவிஸ் → யூனிக்கே → தீமோத்தேயு
விசுவாசம் தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு கடத்தப்பட்டது.
இன்று பல குடும்பங்களில் சொத்து பாரம்பரியம் உள்ளது, கல்வி பாரம்பரியம் உள்ளது. ஆனால் ஆன்மீக பாரம்பரியம் குறைந்து வருகிறது. நமது பிள்ளைகளுக்கு நாம் என்ன விட்டுச் செல்கிறோம்?

- வீடா?
- பணமா?
- அல்லது உயிருள்ள விசுவாசமா?

யூனிக்கே ஒரு அரசி அல்ல. அவள் ஒரு தீர்க்கதரிசியும் அல்ல. ஆனால் அவள் ஒரு தேவபயமுள்ள தாய். அவளுடைய விசுவாசம் மகனை மாற்றியது, சபையை ஆசீர்வதித்தது என்று நாம் அறிகின்றோம். ஆகவே நாமும் கர்த்தருக்குப் பயப்படும் பெண்களாக இருப்போம். குடும்பத்தில் வேதத்தைப் போதிப்போம். பிள்ளைகளுக்காக இடைவிடாமல் ஜெபிப்போம். ஆன்மீக பாரம்பரியத்தை அடுத்த தலைமுறைக்கு கொடுப்போம்.

**“நீதிமான் தன் உத்தமத்தில் நடக்கிறான், அவனுக்குப் பின்வரும் பிள்ளைகள் பாக்கியவான்கள்.” (நீதிமொழிகள் 20:7) ஆமென்.**

**திருமதி. P.ஜாண்சி**
**ஆயரம்மா.**

# திருக்குறள் வழி மறையறிவோம்

**திருக்குறள் 6 கடவுள் வாழ்த்து**

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்.**

பொருள்: மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளின் ஆசைகளை அடக்கி, பொய்யற்ற ஒழுக்க நெறியில் நிலைத்து நிற்பவர்கள் நிலையான வாழ்வையும் நித்திய நன்மையையும் பெறுவார்கள்.

1. **ஐம்பொறிகளையும் தேவனுக்குக் கீழ்ப்படுத்த வேண்டும்**

திருக்குறள் “பொறிவாயில் ஐந்து” என்று கூறுகிறது.
திருமறை நீதிமொழிகள் 4:23
“எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்.”
கண் தவறானவற்றைப் பார்க்கலாம், காது தீயவற்றைக் கேட்கலாம், நாவு பொய்யைப் பேசலாம். ஆனால் தேவனுடைய பிள்ளை தன் பொறிகளை பரிசுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

**2. பொய்தீர் ஒழுக்கம் தேவனுக்குப் பிரியமானது**

திருக்குறள் "பொய்தீர் ஒழுக்க நெறி" என்று கூறுகிறது.

எபேசியர் 4:25

"பொய்யை விட்டு ஒவ்வொருவரும் தன் அயலானோடே மெய்யைப் பேசக்கடவன்."

நீதிமொழிகள் 12:22

"பொய்யான உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பாயிருக்கின்றன."

உண்மை, நேர்மை, தூய்மை ஆகியவை கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படை.

John Stott என்பவர் கூறுகிறார்: "பரிசுத்தம் என்பது தேவாலயத்தில் மட்டும் காணப்படும் குணம் அல்ல, அன்றாட வாழ்க்கையில் வெளிப்படும் உண்மையான கிறிஸ்தவ சாட்சி."

**3. நீதியின் வழியில் நிலைத்திருப்போர் நீடுவாழ்வார்கள்**

திருக்குறள் "நெறி நின்றார் நீடுவாழ்வார்" என முடிகிறது.

சங்கீதம் 1:1-3

தேவனுடைய நியாயப்பிரமாணத்தில் தியானிக்கும் மனிதன் நீர்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்ட மரம்போல் செழிப்பான்.

யோவான் 10:10

"அவர்கள் ஜீவனை அடையவும் பரிபூரணமாக அடையவும் நான் வந்தேன்."

இங்கு "நீடுவாழ்வு" என்பது வெறும் நீண்ட ஆயுள் அல்ல, தேவனுடனான ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையும் நித்திய ஜீவனும் ஆகும்.

திருவள்ளுவர் கூறும் இந்தக் குறள், திருமறை போதிக்கும் பரிசுத்த வாழ்க்கையோடு நெருக்கமாக ஒத்துப்போகிறது. ஐம்பொறிகளை அடக்கி, பொய்யற்ற ஒழுக்கத்தில் நிலைத்து, தேவனுடைய வழியில் நடக்கிறவர்கள் இவ்வுலகிலும் ஆசீர்வாதத்தையும் நித்திய வாழ்வின் நம்பிக்கையையும் பெறுவார்கள்.

**"ஆவியினாலே நடவுங்கள், அப்பொழுது மாம்சத்தின் இச்சையை நிறைவேற்றமாட்டீர்கள்." (கலாத்தியர் 5:16)**

Compiled by **Mrs. Reji Alwin**

# உலக சாக்லேட் தினம்! - ஜூலை 7

இன்று உலகம் முழுவதும் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி உண்ணும் சாக்லேட்டை சிறப்பிக்கும் விதமாக உலக சாக்லேட் தினம் கொண்டாடப்படுகிறது. அழும் சிறு குழந்தைகளை சிரிக்க வைக்கவும், கோபமான நபர்களை சாந்தப்படுத்தவும் என பலவகையிலும் இன்று அத்தியாவசியமாகியுள்ள ஒரு திண்பண்டம் சாக்லேட்.

மனிதன் தோன்றும் காலத்திற்கு முன்பிருந்தே சாக்லேட் செய்ய பயன்படும் ககாவோ (Cacao) தாவரங்கள் பூமியில் முக்கியமாக அமெரிக்க பகுதியில் அதிகமாக விளைந்திருந்தன. ஓல்மெக், மாயன்கள், ஆஸ்டெக் மக்கள் என கி.முவில் வாழ்ந்த மக்கள் கூட சாக்லேட் சாப்பிட்டிருக்கிறார்கள் என்றால் நம்ப முடிகிறதா?

ஆம். ஆனால் அது இப்போது இருக்கும் சாக்லேட் போல கிடையாது. ககோவா தாவரத்தில் இருந்து எடுக்கப்படும் பிசினை ஒரு பானமாக தயாரித்து (கிட்டத்தட்ட தேநீர் போல) ஆதி மக்கள் பருகி வந்தனர். இந்த பானம் அவர்களுக்கு உற்சாகத்தையும், சிறிய அளவிலான போதையையும் அளித்து வந்தது.

16ம் நூற்றாண்டு வரை உலகத்திற்கு சாக்லேட் என்ற பொருளை அவ்வளவாக தெரியாது. 16ம் நூற்றாண்டில் ஸ்பானியர்கள் லத்தீன் அமெரிக்காவைக் கண்டுபிடித்தபோது அங்கிருந்த சாக்லேட்டையும் கண்டுபிடித்தார்கள். அப்போது அது தேநீர் போல ஒரு பானமாகதான் பயன்படுத்தப்பட்டது.

பின்னர் ககோவாவை வைத்து விதவிதமான சாக்லேட் வகைகள் செய்வதற்கு ஐரோப்பியர்கள் அறிந்துக் கொண்டனர். 1847ல் பிரிட்டிஷ் சாக்லேட்டியர்களான ஜே.எஸ்.ஃப்ரை மற்றும் அவரது மகன்கள் முதன்முதலாக சாக்லேட்டை சர்க்கரை சேர்த்து சின்ன சின்ன கட்டிகளாக மாற்றும் முறையை கண்டுபிடித்தனர். பின்னர் அதில் வெண்ணெய் கலந்து மேலும் சில சாக்லேட் வகைகல் கண்டறியப்பட்டன. 1876ல் ஸ்விட்சர்லாந்து சாக்லேட் பிரியர் டேனியல் பீட்டர் என்பவர் சாக்லேட்டில் பால் பவுடரை கலந்து மில்க் சாக்லேட் செய்யும் முறையை கண்டறிந்தார். இப்போது நாம் சாப்பிடும் பல சாக்லேட் வகைகள் இப்படியாக உருவானதுதான்.

இன்று உலகம் முழுவதும் சாக்லேட் என்ற வார்த்தையை கேட்டால் சிரிக்காத குழந்தைகள் கிடையாது. இதய நலன், வயிறு கோளாறுகளை சரிசெய்வது மற்றும் ரத்த அழுத்தம் உள்ளிட்டவற்றிற்கு சாக்லேட் சாப்பிடுவது நல்லது என கூறப்படுகிறது. அதேசமயம் சாக்லேட் அதிகமாக சாப்பிடுவதால் சர்க்கரை அளவு அதிகரித்தல், சொத்தை பல் பிரச்சினையும் ஏற்படும். அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சுதான். அமிர்தமான சாக்லேட்டை அளவோடு உண்டு மகிழ்வாக வாழ்வோம்!

# உலக நீதி நாள் ஜூலை 17

ஐக்கிய நாடுகள் சபையால் (UN) ஜூலை 17 ஆம் தேதி உலக நீதி நாளாக (World Day for International Justice) அறிவிக்கப்பட்டு ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த நாள் உலகம் முழுவதும் நீதியின் அவசியத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் நினைவூட்டுகிறது.

**உலக நீதி நாள் ஏன்?**

எல்லா மக்களும் நீதியின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. ஒரு நாட்டில் அநீதி நடந்தாலும், அதிகாரத்தில் இருப்பவர்கள் குற்றவாளிகளை ஆதரித்தாலும், நீதிக்காகப் போராடுபவர்கள் நம்பிக்கை இழக்காமல் இருக்க வேண்டும். உலக அளவில் நீதி வழங்குவதற்காக சர்வதேச நீதிமன்றம் செயல்படுகிறது என்பதை இந்த நாள் நினைவூட்டுகிறது.

**சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்**

1998 ஆம் ஆண்டு ஜூலை 17 அன்று ரோமில் நடைபெற்ற ஒப்பந்தத்தின் மூலம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) உருவாக்கப்பட்டது. இதற்கு 120 நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

ஒரு நாடு தனது எல்லைக்குள் நடைபெற்ற மிகப் பெரிய குற்றங்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்க முடியாதபோது அல்லது விரும்பாதபோது, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தலையிட்டு நீதி வழங்கும்.

**நீதியின் அவசியம்**

உலகில் பல்வேறு வன்முறைகள், இனப்படுகொலைகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள், பயங்கரவாதச் செயல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இவற்றில் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது உலக மக்களின் எதிர்பார்ப்பாகும்.

குற்றவாளிகள் தப்பித்துச் செல்லும்போது, மக்களின் நீதிமுறையின் மீதான நம்பிக்கை குறைகிறது. எனவே, நாடுகளின் சட்ட அமைப்புகள் வலிமை பெறவும், குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாத சூழல் உருவாகவும் நாம் பாடுபட வேண்டும்.

**உலக நீதி நாளில் நாம் என்ன செய்யலாம்?**

- பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராக குரல் கொடுக்கலாம்.
- இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்களை கண்டிக்கலாம்.
- அமைதி, நீதி மற்றும் மனித உரிமைகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தலாம்.

• விவாதங்கள், கருத்தரங்குகள் மற்றும் சொற்பொழிவுகள் மூலம் நீதியின் மதிப்பை எடுத்துரைக்கலாம்.

அநீதி சில நேரங்களில் வெற்றி பெறுவது போலத் தோன்றலாம். ஆனால் இறுதியில் நீதி வெல்லும் என்ற நம்பிக்கையே மனித சமுதாயத்தின் பலம். உலக நீதி நாளைக் கொண்டாடுவோம்ளூ நீதி, சமத்துவம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்போம்.

**நீங்கள் நியாயமும் நீதியும் செய்து, பறிகொடுத்தவனை ஒடுக்குகிறவனுடைய கைக்குத் தப்புவியுங்கள், நீங்கள் பரதேசியையும் திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்காமலும், கொடுமைசெய்யாமலும், இவ்விடத்தில் குற்றமில்லாத இரத்தத்தை சிந்தாமலும் இருங்கள்.** எரே. 22:3

**Mrs . ஜான்சி ஜெபஸ்டின்**

# ஜுலை 7 உலக மன்னிப்பு தினம் (Global Forgiveness Day)

**மன்னிப்பு மனக்காயங்களை ஆற்றும் மாமருந்து ...!**

மன்னிப்பு மனித உறவுகள் மேம்பட உதவும் ஒரு அற்புதமான செயல். மன்னிக்கும் உணர்வுடன் வாழ்வதால் பல நன்மைகள் கிடைக்கும். நம்முடைய இலக்குகளை எளிதாக முடிக்க அது உதவும். மன்னிக்கும் உணர்வுடன் இருப்பவர்கள், இலக்குகளை முடிக்கவும், சவால்களை சமாளிக்கவும் வலுவாக இருப்பார்கள். மன்னிக்கும் உணர்வுடன் இருப்பவர்கள், பணியிடத்திற்கு மதிப்பை வழங்குவார்கள். சமூக நன்மைக்காக ஆதரவாக இருப்பார்கள்.மன்னிக்கும் உணர்வுடன் இருப்பவர்கள், நேர்மையை கடைப்பிடிப்பார்கள். மனசாட்சி உணர்வுடன் இருப்பார்கள், பச்சாதாபம் நெறிமுறை உணர்வுடன் இருப்பார்கள்.

நாம் மற்றவர்களை மன்னிக்கத் தவறினால் அது ஒரு வித உள் கோபத்தை உருவாக்கி மன, உடல், ஆன்ம நலனைக் கெடுக்கின்றது என்கிறார் டாக்டர் டிக் டிப்பிட் இதனை தன் ஆய்வில் கண்டறிந்துள்ளார். மன்னிப்பு என்பது குணப்படுத்தும் செயல்முறையின் ஒரு பகுதியாகும். மன்னிக்கும் பழக்கமுடைய மனிதர்கள் ஆனந்தமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கின்றனர் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் மன்னிப்பு தொடர்பான ஒரு ஆய்வில், மன்னிக்கும் குணம் உள்ளவர்கள் சில நோய்களால் குறைவாகவே பாதிக்கப்படுவதாகக் கண்டறியப்பட்டது. மறுபுறம், மன்னிக்கும் குணம்

இல்லாதவர்கள் அதிக எண்ணிக்கையிலான உடல்நலப் பிரச்சினைகளை சந்தித்தனர். மன்னிப்பைத் தவிர்ப்பது மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது, இது பதட்டம், உயர் இரத்த அழுத்தம் மற்றும் மனச்சோர்வு போன்ற உடல் அறிகுறிகளுக்கு வழிவகுக்கும். மன்னிப்பை தவிர்ப்பது எதிர்மறை உணர்ச்சிகளையும், கோபம் மற்றும் விரக்தி போன்ற பிரச்சினைகளையும் ஏற்படுத்தக்கூடும்.

மன்னிப்பவர்களுக்கு புற்றுநோய் வரும் வாய்ப்பும் குறைவு என்கிறது அமெரிக்காவின் யேல் மருத்துவ பல்கலைக்கழக ஆய்வு. மன்னிப்பவர்களுக்கு அவர்களின் மன்னிக்கும் மனம் அவர்களின் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது, மன அழுத்தத்தை குறைக்கிறது. இதுவே அவர்களை நோய்வாய்ப்படாமல் பாதுகாக்கிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

உலகின் அனைத்து மதங்களும் மன்னிப்பை பற்றி உயர்வாக குறிப்பிடுகின்றன. "ஒரு மனிதன் தேவ நிலையை அடைய வேண்டுமென்றால், அவனிடம் மன்னிக்கும் தன்மை இருக்க வேண்டும்" என்கிறது பகவத்கீதை." மன்னிக்க மறுப்பவர்கள், சொர்க்கம் செல்ல முடியாது"என்கிறது பைபிள். கடவுளை "அல் கபிர்", என்கிறது இஸ்லாம். இதற்கு"முழுமையாக மன்னிப்பவர்"என்று அர்த்தம்.

மன்னிக்கும் மனம் பயிற்சிகளினால் வருவதில்லை.அது அவரவர் மனதில் இயல்பாக வர வேண்டும்.உதாரணமாக குடும்பத்தில் பெற்றோர்களிடம் மன்னிக்கும் உயர்ந்த மனநிலை இருந்தால் அதனை பார்த்து குழந்தைகளும் மன்னிக்கும் பண்பை கற்றுக் கொள்வார்கள்.

மன்னிப்பு கடந்த கால நிகழ்வுகளை மாற்றாது. ஆனால் எதிர் காலத்தில் வாழ்வில் வசந்தம் பூக்க காரணமாக அமையும்.உன்மையான அன்பு இருக்கும் இடத்தில் மன்னிக்கும் தன்மை தானாகவே வரும். மன்னிப்பு கேட்பவர்களுக்கு தாராளமாக மன்னிப்பு வழங்குங்கள். மன்னிப்பு கேட்க மறந்தவர்களை மறந்து விடுங்கள்.

'தண்டனை கொடுப்பதற்குத் தாமதம் செய். ஆனால், மன்னிப்பு கொடுப்பதற்கு யோசனை கூட செய்யாதே' என்கிறார் அன்னை தெரசா.

கொலோசெயர் 3:13
**"ஒருவருக்கொருவர் பொறுத்துக்கொண்டும், ஒருவர்மேல் ஒருவருக்குக் குறை இருந்தால் ஒருவரை ஒருவர் மன்னித்துக்கொண்டும் இருங்கள். கிறிஸ்து உங்களை மன்னித்ததுபோல நீங்களும் மன்னியுங்கள்."**

# கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்தவ பண்புகள்

**“இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்” (மத்தேயு 5:8)**

மலைப்பிரசங்கம் என்பது இயேசு கிறிஸ்துவின் போதனைகளில் மிக முக்கியமான பகுதியாகும். பரலோக ராஜ்யத்தின் குடிமக்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை இந்தப் மலைபிரசங்கத்தில் ஆண்டவர் தெளிவாக எடுத்துரைக்கிறார். அந்த மலைப்பிரசங்கத்தின் மையமாக விளங்கும் பாக்கியவான்களின் வரிசையில் ஆறாவது பாக்கியவானாக, “இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்” என்று இயேசு அறிவிக்கிறார்.

இயேசுவின் காலத்தில் மதத் தலைவர்கள் வெளிப்புற தூய்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். அவர்கள் சடங்குகளையும் மரபுகளையும் கடைப்பிடித்தனர். ஆனால் அவர்களுடைய இருதயங்கள் தேவனிடமிருந்து தூரமாக இருந்தன. இதற்கு மாறாக, மனிதனின் வெளிப்புற நடத்தையை விட அவனுடைய உள்ளார்ந்த நிலையே முக்கியம் என்பதை இயேசு வலியுறுத்தினார்.

தேவன் மனிதனின் முகத்தையோ தோற்றத்தையோ பார்க்கவில்லை, இருதயத்தையே பார்க்கிறார். “இருதயத்தில் தூய்மை” என்பது பாவமற்ற முழுமையைக் குறிக்கவில்லை. மாறாக, தேவனுக்கு முன்பாக உண்மையாய், நேர்மையாய், இரட்டை மனமில்லாமல் வாழ்வதைக் குறிக்கிறது. சங்கீதக்காரன், “கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுகிறவன் யார்? சுத்தமான கைகளும் தூய இருதயமும் உள்ளவனே” (சங்கீதம் 24:3-4) என்று கூறுகிறார். தூய இருதயம் என்பது தேவனை மட்டுமே நாடும், அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியும் இருதயமாகும்.

இறையியலாளர் மார்ட்டின் லூத்தர், “தேவன் மனிதனின் வெளிப்புற செயல்களைக் காட்டிலும் அவனுடைய இருதயத்தின் நோக்கத்தையே அதிகமாக மதிக்கிறார்” என்று குறிப்பிடுகிறார். மனிதன் நல்ல செயல்களைச் செய்யலாம். ஆனால் அவை சுயநல நோக்கத்தால் செய்யப்பட்டால் தேவனுக்குப் பிரியமானதாக இருக்காது. தூய இருதயம் மட்டுமே தேவனுக்கு ஏற்ற ஆராதனையையும் சேவையையும் உண்டாக்குகிறது.

இன்னும் நாம் பார்ப்போம் என்றால் மலைப்பிரசங்கத்தில் இயேசு சட்டத்தின் ஆழமான அர்த்தத்தை வெளிப்படுத்துகிறார். “கொலை செய்யாதே” என்ற கட்டளையை அவர் வெறும் செயலை மட்டும் பார்க்காமல், அதற்குக் காரணமான கோபத்தையும் வெறுப்பையும் கண்டிக்கிறார். அதுபோல, “விபச்சாரம் செய்யாதே” என்ற கட்டளையை அவர் வெளிப்புற செயலில் மட்டும் நிறுத்தாமல், உள்ளத்தில் எழும் அசுத்த எண்ணங்களையும் சுட்டிக்காட்டுகிறார். இதன் மூலம் பாவத்தின் உண்மையான மூலமாகிய இருதயத்தை இயேசு வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறார். ஜான் கல்வின் என்னுடைய எழுத்துக்களின் “இருதயம் சுத்தமாக இருக்கும்போது மட்டுமே மனிதனின் வாழ்க்கை தேவனுடைய மகிமையைப் பிரதிபலிக்க முடியும்.” என்கிறார். உண்மையில், நம்முடைய வார்த்தைகள், செயல்கள், உறவுகள் அனைத்தும் இருதயத்திலிருந்து வெளிப்படுகின்றன. இருதயம் தூய்மையாக இருந்தால் வாழ்க்கையும் தூய்மையாக இருக்கும்.

இந்த வசனத்தில் ஒரு வாக்குத்தத்தமும் இணைக்கப்பட்டுள்ளது: “அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.” இது பரலோகத்தில் தேவனுடைய மகிமையை நேரடியாகக் காணும் நம்பிக்கையைக் கொடுக்கிறது. அதேவேளையில், இப்பூமியிலேயே தேவனுடைய பிரசன்னத்தையும் செயல்களையும் அனுபவிக்கும் ஆசீர்வாதத்தையும் குறிக்கிறது. பாவம் மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே தடையாக நிற்கிறது. ஆனால் தூய இருதயம் தேவனோடு நெருக்கமான உறவை உருவாக்குகிறது.

சார்லஸ் ஸ்பர்ஜன் கூறும்போது “தூய இருதயம் தேவனுடைய முகத்தைப் பார்க்கும் ஆன்மீகக் கண்களாகும்.” உலகத்தின் சத்தமும் பாவத்தின் கறையும் நிரம்பிய வாழ்க்கையில் தேவனுடைய சத்தத்தைத் தெளிவாகக் கேட்கவும், அவருடைய வழிநடத்துதலை உணரவும் தூய இருதயம் அவசியமாகிறது.

ஆனால் இந்தத் தூய்மையை மனிதன் தன்னால் உண்டாக்க முடியாது. தாவீது, **“தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்”** (சங்கீதம் 51:10) என்று ஜெபித்தார். தூய இருதயம் என்பது தேவ கிருபையின் விளைவு. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்மைப் பாவத்திலிருந்து சுத்திகரிக்கிறது. பரிசுத்த ஆவியானவர் நம்மை நாளுக்கு நாள் பரிசுத்தப்படுத்துகிறார்.

இன்றைய உலகில் வெளிப்புற தோற்றம், புகழ், சாதனை ஆகியவற்றிற்கு அதிக மதிப்பு கொடுக்கப்படுகிறது. ஆனால் தேவன் இன்னும் இருதயத்தையே பார்க்கிறார். ஆகவே, நமது வாழ்க்கையின் ஒவ்வொரு நாளிலும், "என் இருதயம் தேவனுக்கு முன்பாக தூய்மையாய் இருக்கிறதா?" என்று நம்மை நாமே ஆராய வேண்டும்.

அன்புக்குரியவர்களே மத்தேயு 5:8 நமக்கு ஒரு அழைப்பையும் ஒரு வாக்குத்தத்தத்தையும் தருகிறது. அழைப்பு என்னவென்றால், இருதயத்தில் தூய்மையாய் வாழ வேண்டும் என்பதாகும். வாக்குத்தத்தம் என்னவென்றால், அப்படிப்பட்டவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் என்பதாகும். ஆகையால் தாவீதின் ஜெபத்தை நாமும் ஜெபிப்போம்: **"தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலையான ஆவியை எனக்குள் புதுப்பியும்."** அப்பொழுது நமது வாழ்க்கை தேவனுடைய மகிமையை வெளிப்படுத்தும் ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையாக மாறும்.

**By Mrs. P. Johnsy Jebastin**

# மனிதர்களை தேடிய மாமனிதர்கள்

## ராபர்ட் மாரிசன் (Robert Morrison)

Robert Morrison நவீன காலத்தின் முக்கிய கிறிஸ்தவ மிஷனரிகளில் ஒருவராக அறியப்படுகிறார். அவர் 1782 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்தார். சிறுவயதிலேயே ஆண்டவரை ஏற்றுக்கொண்டு, சுவிசேஷத்தை உலகிற்கு அறிவிக்க வேண்டும் என்ற பாரத்தைப் பெற்றார். 1807 ஆம் ஆண்டு சீனாவிற்கு சென்ற முதல் புராட்டஸ்டண்ட் மிஷனரியாக வரலாற்றில் இடம்பிடித்தார். அக்காலத்தில் சீனாவில் கிறிஸ்தவப் பிரசங்கத்திற்கு பல தடைகள் இருந்தபோதிலும், அவர் மனம் தளராமல் ஊழியம் செய்தார்.

1. **இராபர்ட் மாரீஸன் முக்கிய பங்களிப்புகள்**

- சீன மொழியைக் கற்றுத் தேர்ந்தார்.
- முழு வேதாகமத்தையும் சீன மொழியில் மொழிபெயர்த்தார்.
- சீன–ஆங்கில அகராதியை உருவாக்கினார்.
- பலருக்கு சுவிசேஷத்தை அறிவித்தார்.
- கிறிஸ்தவ இலக்கியங்களை வெளியிட்டு மக்களை சென்றடைந்தார்.

**2. ராபர்ட் மாரீஸன் வாழ்வில் இருந்து நம் வாழ்வுக்கு**

**2.1. அழைப்பிற்கு கீழ்ப்படிதல்**
“போங்கள், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்” (மத்தேயு 28:19)
ராபர்ட் மாரிசன் பல தடைகள் இருந்தாலும் தேவனின் அழைப்பிற்கு கீழ்ப்படிந்தார்.

**2.2. பொறுமையும் விடாமுயற்சியும்**
பல ஆண்டுகள் உழைத்த பிறகே சில கனிகளைப் பார்த்தார். இருப்பினும் அவர் சோர்ந்து போகவில்லை.
“நன்மைசெய்கிறதில் சோர்ந்து போகாதிருப்போம்” (கலாத்தியர் 6:9)

**2.3. தேவனுடைய வார்த்தைக்கு முன்னுரிமை**
வேதாகமத்தை மக்களின் தாய்மொழியில் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இருந்தது. அதனால் ஆயிரக்கணக்கான மக்கள் தேவனுடைய வார்த்தையை அறிய முடிந்தது.
ராபர்ட் மாரிசனின் வாழ்க்கை, “தடைகள் இருந்தாலும் தேவனுடைய அழைப்பிற்கு உண்மையாய் இருப்போம்” என்ற பாடத்தை நமக்குக் கற்பிக்கிறது. ஒரு மனிதனின் அர்ப்பணிப்பு, ஒரு தேசத்தின் ஆவிக்குரிய வரலாற்றையே மாற்ற முடியும் என்பதை அவரது வாழ்க்கை நிரூபிக்கிறது. அவரது விசுவாசம், பொறுமை, மற்றும் சுவிசேஷ ஆர்வம் இன்றும் கிறிஸ்தவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது.

**By Mr. J.Raja**

# சின்ன சின்ன சிந்தனைகள்

## கடமையும் பொறுப்பும்

கடமையைப் பொறுத்த அளவில் மனிதர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

- ஒன்று செய்ய வேண்டிய கடமையைச் செய்யாதவர்கள்
- இரண்டு செய்ய வேண்டிய கடமையை மட்டும் செய்பவர்கள்.
- மூன்று செய்ய வேண்டிய கடமையைவிட கொஞ்சம் அதிகமாகவே செய்பவர்கள்.

**முதல் வகையினர்**

- ❖ சமுதாயத்தை நாசப்படுத்தும் சாறுண்ணிகள்.
- ❖ ஊக்கத்தோடு உழைப்பவர்களுக்கு இடறலாக இருப்பவர்கள்.
- ❖ சோம்பேறித்தனத்தால் தங்களையும் தங்களைச் சுற்றி உள்ளவர்களையும் சாகடிப்பவர்கள்.
- ❖ கடமைக்கும் வாழ்வின் நிறைவுக்கும் தொடர்பு உண்டு என்ற அடிப்படை உண்மையைக்கூட அறியாதவர்கள்.

**இரண்டாம் வகையினர்**

- ❖ சமுதாய வீட்டில் வாழ்வதற்கான வாடகை கொடுப்பவர்கள்.
- ❖ சந்தோசமாக பயணம் செய்ய வேண்டிய வாழ்வு வண்டியைத் தள்ளிக்கொண்டு போகின்றவர்கள்.
- ❖ கட்டாய உணர்வே இவர்களது கடமையுணர்வுக்குக் காரணமாய் இருக்கிறது.

மூன்றாம் வகையினர்

- ❖ சமுதாயத்தை நாளைய முன்னேற்றத்துக்கு இழுத்துச் செல்லும் சிற்பிகள்.
- ❖ வாழ்வின் நிறைவு அதிகமாகக் கொடுப்பதில் அடங்கியிருக்கிறது என்ற இரகசியம் தெரிந்தவர்கள்.
- ❖ செய்கின்ற காரியங்களை 'கடமையுணர்வு' என்பதையும் தாண்டி, ஈடுபாட்டோடு செய்பவர்கள்.
- ❖ அர்ப்பண உணர்வு அதிகம் பெற்றிருப்பவர்கள்.

"இந்த உலகைத் தன்னால் முடிந்த அளவிற்கு சிறிய அளவிலேனும் ஒரு சிறந்த இடமாக மாற்ற வேண்டிய கடமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு" அன்னை தெரசா.

**மத்தேயு 25:21**

**"நல்லதும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்."**

Compiled by **Mr. Raja Kumar**

# திருமறை அறிவுப்போட்டி ஜூலை 2026

## ஆதியாகமம் 6-10 அதிகாரங்கள்

**(சரியான விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 26.07.2026)**

1. கர்த்தருக்கு முன்பாக நீதிமானாயிருந்தவன் யார்?
2. மாம்சத்தின் உயிர் எது?
3. பலத்த வேட்டைக்காரன் யார்?
4. கொடுமையினால் நிறைந்திருத்தது எது?
5. நறுமணத்தை முகர்ந்தவர் யார்?
6. சபிக்கப்பட்டவன் யார்?
7. கூஷின் தந்தை பெயர் என்ன?
8. புறாவின் வாயில் இருந்தது எது?
9. ஜலப்பிரளயம் உண்டான போது நோவாவின் வயது என்ன?
10. மனிதன் மற்றும் உயிரினங்கள் அனைத்துடனும் கடவுள் செய்த உடன்படிக்கையில் அடையாளம் என்ன?

# ஜூன் 2026 - சரியான விடைகள்

## ஆதியாகமம் 1-5 அதிகாரங்கள்

1. யாபால் (4:20)
2. ஆவிலா தேசம் (2:11)
3. இவன் நம்மை தேற்றுவான் (5:29)
4. சூரியன் (1:16)
5. மெத்தூசலா, வயது 996 (5:27)
6. ஏழாம் நாள் (2:3)
7. ஏவாள் (3:20)
8. ஸ்திரீயின் வித்து (இயேசு) (3:15)
9. 5-ம் நாள் (1:20-23)
10. காயினின் முகநாடி (4:5)

# திருமறை அறிவுப்போட்டி சரியான விடை எழுதியவர்கள்


| | |
|---|---|
| 1 | Mrs. மினு பெர்மின் |
| 2 | Mrs. கிளாட்சிலி பினுகுமார் |
| 3 | Mrs. ஜாஸ்மின் ஜஸ்டின் |
| 4 | Mrs. பிரதீபா ராஜேஷ் |
| 5 | Mrs. ரோஸ்மின் கிருபா டார்வின் |
| 6 | Mrs. சபிதா அருண் |
| 7 | Mrs. ஆன்லெட் ஜட்சன் |
| 8 | Mrs. திவ்யா ஜோஸ் |
| 9 | Mrs. நிஷா ஸ்டாலின் |
| 10 | Mrs. நித்தியா வின்செண்ட் |
| 11 | Mrs. பெனிஷா சிங் |
| 12 | Mrs. அனிலா சதீஷ் |
| 13 | Mrs. ஷாலினி E |
| 14 | Mrs. ஜெப ஷாலு ஜெகன் |
| 15 | Mrs. சுஜிலா சோமு |
| 16 | Mrs. வயோலா ஸ்டாலின் |
| 17 | Mrs. ஷாலினி டீனு |
| 18 | Mrs. வெனினா ஸ்டாலின் |
| 19 | Mrs. மெர்லின் ஹெர்பெர்ட் சுஜின் |
| 20 | Mrs. பொம்மி ராஜன் |
| 21 | Mrs. சிந்து மேரி |
| 22 | Mrs. ஜேன் மிராக்கிலின் |
| 23 | Mrs. ஆட்லின் ரீனா பிரபு |
| 24 | Mrs. கிறிஸ்டில்டா செல்வின் |
| 25 | Mrs. லாரா சுபின் |
| 26 | Mrs. விஜய லதா |

# குறுக்கெழுத்து புதிர்

## வெளிப்படுத்தின விசேஷம் 14 - 18 அதிகாரங்கள்

**(சரியான விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 26.07.2026)**

வயது : 21 வயதிற்கு மேல் உள்ளவர்கள்




**மேலிருந்து கீழ்**

1. கோபாக்கினையின் ஆலையிலிருந்து பாய்ந்தோடியது எது?

**கீழிருந்து மேல்**

2. உக்கிரமான மதுவை எல்லா மக்களுக்கும் குடிக்க கொடுத்தவன் யார்?
3. பாபிலோனிய சூனியத்தால் மோசம் போனவர்கள் யார்?
4. மிருகத்தின் சொரூபத்தை வணங்குகிற மனுஷருக்கு உண்டானது எது?
5. பலமுள்ள தூதன் சமுத்திரத்தில் எறிந்தது எது?

**வலமிருந்து இடம்**

6. மீட்கப்பட்டவர்களால் மட்டுமே கற்றுக்கொள்ளக்கூடியது எது?
7. பாபிலோனின் பாவம் எதுவரை எட்டினது?
8. ஒரே நாளில் வந்தது எது?

**இடமிருந்து வலம்**

9. வானத்தின் மத்தியில் நின்ற தூதனிடம் இருந்தது எது?

10. தேவாலயம் எதினால் நிறைந்திருந்தது?

(குறுக்கெழுத்து புதிர் போட்டியில் கலந்து கொள்வோர் விடைகளை கொடுக்கப்பட்டுள்ள கட்டத்திற்குள் நிரப்பி தரவும்.)

## குறுக்கெழுத்து புதிர் சரியான விடைகள் (வெளிப். 9-13)

| **மேலிருந்து கீழ்** | | **கீழிருந்து மேல்** | |
|---|---|---|---|
| 1 | வெட்டுக்கிளிகள் (9:3) | 4 | இஸ்ரவேல் (12:1) |
| 2 | சிறு புஸ்தகம் (10:10) | 5 | பாதாளதூதன் (9:11) |
| 3 | இயேசு (12:5) | | |
| **வலமிருந்து இடம்** | | **இடமிருந்து வலம்** | |
| 6 | சாட்சிகள் (11:3,4) | 8 | பாதாளக்குழி (9:2) |
| 7 | சிறுத்தை (13:2) | 9 | தேவரகசியம் (10:6) |
| | | 10 | எருசலேம் (11:8) |

## குறுக்கெழுத்து புதிர் சரியான விடை எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | Nisha Stalin | 13 | Jeba Shalu Jegan |
| 2 | Anlet Judson | 14 | Shalini Teenu |
| 3 | Gladsily Binukumar | 15 | Merlin Herbert Sujin |
| 4 | Rosemine Kiruba Darwin | 16 | Sindhu Mary |
| 5 | Pradeepa Rajesh. T. | 17 | Viola Stalin |
| 6 | Sherin Jeba R. | 18 | Sujila Somu |
| 7 | Venina Stalin | 19 | Jane Miracline |
| 8 | Sabitha Arun | 20 | Pommi Rajan |
| 9 | Minu Bermin | 21 | Anila Satheesh |
| 10 | Benisha Singh | 22 | Lara subin |
| 11 | Shalini E | 23 | Vijaya Latha |
| 12 | Christilda Selvin | | |

# கிறிஸ்தவ மிஷனரிகளின் சமுதாய பங்களிப்புகள்

## பாளையங்கோட்டைப் பார்வையற்றோர் பள்ளியின் தாய்
## மிஸ் அனி ஜேன் ஆஸ்க்வித் (1888 - 1919)

தென்னிந்தியாவின் திருநெல்வேலிப் பகுதியில் கல்விப் பணியிலும், சமூக சேவையிலும் கிறிஸ்தவ மிஷனரிகளின் பங்களிப்பு அளப்பரியது. அதில் தனித்துவம் வாய்ந்த ஒரு மைல்கல், பாளையங்கோட்டையில் பார்வையற்றோருக்காகத் தொடங்கப்பட்ட பள்ளியாகும். இந்தப் பணியின் பின்னணியில் ஒரு தாயுள்ளத்தோடு செயல்பட்டவர் மிஸ் அனி ஜேன் ஆஸ்க்வித். **'பார்வையற்றோரின் பெரியம்மா'** என்று அன்போடு அழைக்கப்பட்ட இவரது அர்ப்பணிப்பு மிக்க வரலாறு நமக்கு இன்றும் மெய்சிலிர்க்க வைகின்றது.

**இந்திய வருகையும் ஆரம்பப் பணியும்:**

இங்கிலாந்தின் சி.எம்.எஸ் (Church Missionary Society) அமைப்பினால் அனுப்பப்பட்ட அனி ஜேன் ஆஸ்க்வித், 1881-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் தேதி பாளையங்கோட்டைக்கு வந்தடைந்தார். தொடக்கத்தில் சாரா டக்கர் நிறுவனத்தில் மிஷனரியாகப் பணியாற்றினார். அவரது முயற்சியால் அந்த நிறுவனம் ஒரு உயர்நிலைப் பள்ளியாகவும், பின்னர் கல்லூரியாகவும் தரம் உயர்த்தப்பட்டது.

**பணியின் திருப்புமுனை - சுப்பு என்னும் சிறுவன்:**

ஒரு நாள் தனது வீட்டு வாசலில் பிச்சை கேட்டு நின்ற 'சுப்பு' என்ற பார்வையற்ற சிறுவனை அஸ்குவித் சந்தித்தார். "பிச்சை எடுப்பதைத் தவிர உன்னால் வேறென்ன செய்ய முடியும்?" என்று அவர் கேட்டபோது, உழைத்து வாழும் உணர்வை அவனுக்குள் விதைத்தார். அவனை ஒரு 'புங்காவாலா'வாக (விசிறி இழுப்பவர்) வேலையில் அமர்த்தி, உழைப்புக்கான ஊதியத்தை வழங்கினார். இந்தச் சிறிய தொடக்கமே தென்னிந்தியாவில் பார்வையற்றோர் கல்விக்கான விதையாக அமைந்தது.

**கல்வி முறை மற்றும் 'மூன்' எழுத்துமுறை (Moon's Type):**

பார்வையற்றோர் தொடுதல் மூலம் வாசிப்பதைக் கண்டறிந்த அஸ்குவித், அவர்களுக்குத் தமிழ் மொழியில் கல்வி புகட்ட விரும்பினார். 1888-இல் இங்கிலாந்து சென்றிருந்தபோது, டாக்டர் வில்லியம் மூன் என்பவரைச் சந்தித்து, அவர் உருவாக்கிய 'மூன் எழுத்துமுறையை' கற்றார். 1889-இல் இந்தியா திரும்பியபோது, தமிழ் உயிர் மற்றும் மெய் எழுத்துக்களுக்கான மூன் குறியீடுகளுடன் பாடப்புத்தகங்களைத் தயாரித்து வந்தார். சுப்பு (ஞானஸ்நானத்திற்குப் பின் 'தேவப்பிரியம்') இந்தப் புதிய முறையில் முதன்முதலாகப் படித்துத் தேறினான். இவனே இப்பள்ளியின் முதல் பார்வையற்ற ஆசிரியருமாவார்.

**பள்ளியின் வளர்ச்சி (1890 - 1910):**

- 1890: பாளையங்கோட்டையில் பார்வையற்றோருக்கான முறையான பள்ளி வகுப்புகள் தொடங்கின. ஆரம்பத்தில் சிறுவர்களுக்கு மட்டுமே இருந்த இப்பள்ளியில், 'ஆவுடையம்மாள்' (கிருபைப்பேட்டாள்) என்ற சிறுமி முதல் மாணவியாகச் சேர்ந்ததன் மூலம் சிறுமிகளுக்கான பிரிவும் தொடங்கியது.

- 1893: பண்ணைவிளையில் மூன்றாவது பள்ளி தொடங்கப்பட்டது.

- 1908: மாணவர் எண்ணிக்கை அதிகரித்ததால், பாளையங்கோட்டையில் 12 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு புதிய வளாகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

- தொழிற்கல்வி: மாணவர்கள் சுயமாக உழைத்து வாழ வேண்டும் என்பதற்காகப் பாய் நெய்தல், பருத்தி ஆடை நெய்தல், நாற்காலிகளுக்குப் பின்னுதல் போன்ற தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டன.

**பிரெய்லி முறையின் அறிமுகம் (1912):**

தொடக்கத்தில் மூன் எழுத்துமுறை பயன்படுத்தப்பட்டாலும், அது கைகளால் எழுத கடினமாக இருந்தது. எனவே, 1912-ஆம் ஆண்டு அஸ்குவித் அவர்கள் 'பிரெய்லி' (Braille) முறையை அறிமுகப்படுத்தினார். தமிழ் மொழிக்கேற்ப பிரெய்லி குறியீடுகளை அமைத்து, பார்வையற்ற மாணவர்கள் தாங்களாகவே எழுதவும் படிக்கவும் வழிவகை செய்தார்.

**அரசின் அங்கீகாரமும் கௌரவமும்:**

மிஸ் அஸ்குவித்தின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டி, சென்னை அரசு அவருக்கு 1907-ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தில் 'கைசர்-இ-ஹிந்த்' (Kaiser-I-Hind) வெண்கலப் பதக்கத்தை வழங்கி கௌரவித்தது. பல மாவட்ட ஆட்சியர்களும், ஆளுநர்களும் இவரது பள்ளிக்கு வருகை தந்து பாராட்டியுள்ளனர்.

**இறுதிப் பயணமும் மறைவும்:**

சுமார் 38 ஆண்டுகள் இந்தியாவில் பணியாற்றிய மிஸ் அஸ்குவித், உடல்நலக் குறைவு காரணமாக 1918-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இங்கிலாந்து திரும்பினார். 1924 செப்டம்பர் 29-ஆம் தேதி இங்கிலாந்தின் டன்ப்ரிட்ஜ் வெல்ஸ் (Tunbridge Wells) என்ற இடத்தில் தனது 73-வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

“ஒளியை நோக்கி” என்ற நோக்கில் அவர் தொடங்கிய இந்தப் பணி, இன்று 'தரிசனமனை' (House of Vision) என்ற பெயரில் பன்முகத்தன்மை கொண்ட நிறுவனமாக வளர்ந்து நிற்கிறது. பார்வையற்றோர் சமூகத்தின் ஒரு அங்கமாக, மரியாதையுடனும் சுயசார்புடனும் வாழ்வதற்கு மிஸ் அனி ஜேன் ஆஸ்க்வித் போட்ட அடித்தளம் என்றும் போற்றுதலுக்குரியது.

**ஆய்வுக் கட்டுரை ஆசிரியர்:**
**மன்னா செல்வகுமார்**
**கிறிஸ்தவ மரபு ஆய்வாளர்**

# KIDS STORY TIME

## A cute little story on forgiveness

Dear Children,

A kindergarten teacher had decided to let her class play a game. The teacher told each child in the class to bring along a plastic bag containing a few potatoes.

Each potato will be given a name of a person that the child hates, So the number of potatoes that a child will put in his/her plastic bag will depend on the number of people he/she hates.

So when the day came, every child brought some potatoes with the name of the people he/she hated. Some had 2 potatoes; some 3 while some up to 5 potatoes. The teacher then told the children to carry with them the potatoes in the plastic bag wherever they go (even to the toilet) for 1 week.

Days after days passed by, and the children started to complain due to the unpleasant smell let out by the rotten potatoes. Besides, those having 5 potatoes also had to carry heavier bags. After 1 week, the children were relieved because the game had finally ended.

The teacher asked: "How did you feel while carrying the potatoes with you for 1 week?" The children let out their frustrations and started complaining of the trouble that they had to go through having to carry the heavy and smelly potatoes wherever they go.

Then the teacher told them the hidden meaning behind the game. The teacher said: "This is exactly the situation when you carry your hatred for somebody inside your heart. The stench of hatred will contaminate your heart and you will carry it with you wherever you go. If you cannot tolerate the smell of rotten potatoes for just 1 week, can you imagine what is it like to have the stench of hatred in your heart for your lifetime?"

**Moral of the story:** Throw away any hatred for anyone from your heart so that you will not carry sins for a lifetime. Forgiving others is the best attitude to take!

**Mr. Billy**

# YOUTH SERMON

## Which Path Will You Choose: The Way of Lies or the Way of Truth?

Dear teenagers

Once again, I greet you all in the name of our lord and saviour Jesus Christ.

Life constantly places us at a crossroads where we must choose between truth and falsehood. For young people especially, these choices are not always dramatic or obvious. Often, they come in small decisions what we say, how we present ourselves, and whether we choose honesty when it is inconvenient. Yet the Bible makes it clear that the difference between truth and lies is not just a moral issue; it is a spiritual battle with eternal consequences.

The story of humanity begins with a lie. In Genesis 3:4, the serpent told Eve, “Ye shall not surely die.” This was not a harmless misunderstanding; it was a direct contradiction of God’s Word. That single lie introduced doubt into the human heart. Eve began to question what God had said, and that doubt led to disobedience. From that moment, sin entered the world. This shows us a powerful truth: sin often begins when we believe a lie more than we believe God.

The Bible also reveals the nature of Satan as the source of deception. Jesus said in John 8:44, “He is a liar, and the father of it.” Lies are not just mistakes in speech; they are tools used to draw people away from God. Through lies, Satan distorts truth, creates confusion, and leads people into sin. Every time a person chooses deception, they unknowingly step into a path that opposes God’s will.

In contrast, God is the absolute source of truth. Numbers 23:19 declares that God does not lie, and John 14:6 reveals that Jesus Himself is “the way, the truth, and the life.” Truth is not just a moral idea it is the very character of God. To walk with God is to walk in truth. Therefore, every believer is called not only to believe the truth but also to live and speak it in daily life.

For young people today, this message is especially important. We live in a world where lies are often normalized. People may call them “small lies,” “white lies,” or “harmless lies.” In schools, workplaces, and social media, there is constant pressure to hide mistakes, exaggerate achievements, or present a false image of ourselves. Students may be tempted to cheat in exams, while others may lie to gain acceptance or avoid embarrassment. At first, these choices may seem minor, but they slowly shape character and damage integrity.

Jesus said in John 8:32, “Ye shall know the truth, and the truth shall make you free.” Lies may appear easier in the moment, but they eventually lead to guilt, fear, and bondage. Truth, on the other hand, brings freedom, peace, and a clear conscience before God. A life built on truth may not always be easy, but it is always blessed.

Even in the Garden of Eden, we see that Adam and Eve’s fall did not begin simply with disobedience it began with believing a lie. In the same way, many of our struggles today begin when we accept false ideas like “no one will know,” “it doesn’t matter,” or “I can fix it later.” These thoughts may seem small, but they can lead us away from God’s plan for our lives.

As young believers, we are called to be different. We are called to test every thought, every voice, and every temptation against the Word of God. Choosing truth means choosing Christ in every situation. It means being honest even when it is difficult, standing for integrity when others compromise, and refusing to let fear or pressure shape our decisions.

In conclusion, every young person must answer a serious question: Which voice will you follow the voice of deception or the voice of truth? The way of lies may seem attractive for a moment, but it leads to destruction. The way of truth leads to freedom, peace, and eternal life in Christ.

Let us choose today to be people who love truth, speak truth, and walk in truth. For Jesus Christ, who is the Truth, is calling us to follow Him wholeheartedly.

**Rev G. Sam Alan Jim, Madurai.**

# One Verse. One Truth

**I will not fail you or forsake you. Joshua 1:5b (NRSV)**

As we move through another month in 2026, God reminds us that His presence is with us wherever we go. We may face challenges, responsibilities, and unexpected situations, but we never walk alone. When Joshua prepared to lead Israel into the Promised Land, the task before him seemed overwhelming. Yet God encouraged him with a promise that would sustain him through every challenge. Therefore, He says: "I will not fail you or forsake you." - Joshua 1:5b (NRSV)

The Hebrew word translated forsake is ('āzab), meaning to leave, abandon, or neglect. God's promise assured Joshua that He would never withdraw His presence or support. The strength of Joshua's mission rested not in his ability, but in God's faithful presence.

For July's, God invites us to walk with confidence, knowing that He will never leave us. Whatever lies ahead, His presence goes with us.

**Mr. JOSE PRAKASH**

# DO YOU have the habit of reading?

I think the Jeevanathi readers will say yes to the above question. If not, I request you to go to the nearby library, take at least one good book, and start reading.

The reading habit is decreasing among young people. Most of them read only textbooks, and they do not even touch other books. So, most of them lack general knowledge. Why should we read books? Why should we go to the library? What is the use of going to the library? Our former Prime Minister Jawaharlal Nehru said that if people stop reading books, they will lack knowledge and the growth of wisdom. Horace Mann said that a house without books is like a room without windows and that parents should raise their children surrounded by books because children will learn quickly. When we read good books, our thoughts expand and wisdom grows. Our thoughts become elevated.

Recently, I read the book "Wings of Fire" by our former President, Dr. Abdul Kalam, the missile man. His autobiography details how he worked hard day and night as a scientist to send a guided missile into space, and how the Western countries were astonished; it touched my heart.

As Christians, to lead a successful life, we must read spiritual books. Sadhu Sundar Singh also read many spiritual books. Even our Lord Jesus Christ read verses from Isaiah in the scroll at the church. Our God knew the Scriptures. In Matthew chapter 4, He fasted for 40 days, and when Satan tempted Him, saying if He was the Son of God, to turn the stones into bread, He replied, " Man does not live by bread alone, but by the words from the mouth of God. " He quoted verses from Deuteronomy to Satan and overcame him.

So, my fellow believers in Christ, take time to read good books. Go to the nearby library or buy books of your own; your life will be lifted high when you read good books. Your spiritual life will also be blessed, and there is no doubt about it.

**Rev. J.D.R. Jebastin**

# Streams for the soul

## Life Speaks Louder

"Whether you eat or drink, or whatever you do, do it all for the glory of God." (1 Corinthians 10:31)

A group of young men were waiting at a bus station. Someone thought they were doing something wrong and informed the police. Before the police arrived, the young men went to a hotel to have lunch.

Two police officers followed them and watched from a distance. When the food was served, the young men bowed their heads and prayed before eating.

One officer called a young man and asked what had happened at the bus station. The young man calmly explained that they were only trying to stop another person from causing trouble. The officers realized they had done nothing wrong and apologized. The young men's behavior showed that they were sincere and honest Christians.

This story reminds us that people are always watching how Christians live. Our actions often speak louder than our words. When we live in a way that honors God, others can see Christ in us.

"Let your light shine before others, so that they may see your good works and glorify your Father in heaven." (Matthew 5:16)

Compiled by **D.J. Godlin**

# இறை பிரசன்னத்தில் !

***நம்பிக்கையில் சந்தோஷமாயிருந்து, உபத்திரவத்தில் பொறுமையாயிருந்து, ஜெபத்தில் உறுதியாயிருங்கள் ரோமர் 12:12***

- உலக சமாதானத்திற்காக, வன்முறைகள், தீவிரவாதங்கள் ஒழிய .....
- உலகத்தில் நடக்கின்ற யுத்தங்கள் மாற ஆண்டவரின் பாதத்தில் மன்றாடுவோம்.
- அனுதின பிரயாணங்களை மேற்கொள்ளுவதற்காக ......
- உலக திருச்சபைகளுக்காகவும் இந்திய திருச்சபைகளுக்காகவும் .....
- தென்னிந்திய திருச்சபைக்காகவும் அதன் அனைத்து பேராயர்கள் மற்றும் அவர்களது திருப்பணிகளுக்காகவும் வேண்டுதல் செய்வோம்.
- கன்னியாகுமரி மற்றும் அனைத்து பேராயத்திற்காய் மன்றாடுவோம் .....
- நமது திருச்சபைக்காகவும் அதன் ஊழியங்களுக்காகவும் மற்றும் ஜுனியர் சர்ச் பெண்களுக்குச் சங்கம் ஆகியவற்றிற்காகவும் ஆண்டவரின் சமூகத்தில் மன்றாடுவோம்.
- நம்முடைய திருச்சபைக்கு வந்து கொண்டிருக்கும் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்காக மன்றாடுவோம். குறிப்பாக அவர் தங்கியிருக்கின்ற முகாம்கள் மற்றும் இடங்களில் ஆண்டவருடைய பாதுகாப்பு எப்பொழுதும் அவர்களோடு இருக்க மன்றாடுவோம்.
- கிறிஸ்துவின் அன்பை பிரதிபலிக்கும் அனைத்து ஊழியங்களுக்காக மற்றும் அருள்பணியாளர்களின் பாதுகாப்புக்காக மன்றாடுவோம்.
- இந்திய தேசத்திற்காகவும் நாம் வாழும் UAE தேசத்திற்காகவும் அதன் தலைவர்களுக்காகவும் .....
- திருமணம் ஆகி புத்திர பாக்கியங்களுக்கு காத்திருப்போர்களுக்காக, கர்ப்ப ஸ்திரீகளுக்காக .....
- கடன் மற்றும் குடும்ப பிரச்சினைகள் பாதிக்கப்பட்டோருக்காக ......
- பலதரப்பட்ட பலவீனங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ......
- முதிர் வயதினரின் பாதுகாப்பிற்காக அவருடைய சுகத்திற்காக .....
- புதிய வேலை வாய்ப்புகளை எதிர்நோக்கி காத்திருப்பவர்களுக்காக .....
- வேலைகளில் உயர்வை எதிர்பார்த்து இருப்பவர்களுக்காக .....
- விளையாட்டுத்துறையில் இருக்கும் நம்முடைய பிள்ளைகளுக்காக அவர்கள் வெற்றியின் வழியாக அவருடைய நாமம் மகிமை பெற ......
- உலகத்தில் நடைபெறும் அநிதிநிறைந்த செயல்கள் மாற அவருடைய சமூகத்தில் மன்றாடுவோம் .....
- உலகத்தில் வாழும் எளிய மக்களுக்காக பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்காக மன்றாடுவோம் .....
- பிரவேசிக்க இருக்கும் இந்தக் கோடை காலங்களில் ஆண்டவருடைய பாதுகாப்புக்காகவும் நல்ல இயற்கையின் சூழ்நிலைகளுக்காகவும் ......
- விடுமுறை காலங்களில் சொந்த தேசத்திற்கு பிரயாணப்படும் மக்களுக்காக அவர்களுடைய பாதுகாப்பு நிறைந்த பிரயாணங்களுக்காக மன்றாடுவோம்.
- இப்புதிய மாதத்தில் கர்த்தருடைய வழி நடத்துவதற்காக இறைவனிடம் வேண்டுவோம்.

# சிறுவர் பகுதி...

## COLOUR THE PICTURE

(Age 3-9 years)



# CHILDREN’S QUIZ CORNER

## Genesis: Chapters 6-10

(Age 10-18 years)

**1.On which day of the second month did all the springs of the great deep burst forth?**

a. Tenth
b. Fifteenth
c. Seventeenth
d. Twentieth

**2.What promise did the LORD make after Noah's sacrifice?**

a. Never send rain again
b. Never destroy mountains
c. Never again curse the ground because of humans
d. Never allow storms

**3.How many days before the flood did God tell Noah He would send rain?**

a. Three
b. Five
c. Seven
d. Forty

**4.What did God say would now fall on all the animals?**

a. Peace
b. Blessing
c. Fear and dread
d. Joy

**5. Which city is listed first as part of Nimrod's kingdom?**

a. Nineveh
b. Erek
c. Akkad
d. Babylon

**6.What were the names of Noah's three sons mentioned in Genesis ?**

a. Abraham, Isaac, and Jacob
b. Cain, Abel, and Seth
c. Shem, Ham, and Japheth
d. Ephraim and Manasseh

**7. What was the first thing Noah built after leaving the ark?**

a. House
b. Tower
c. Tent
d. Altar

**8.In Genesis, how long did the Lord declare man's days would be, placing a limitation on human lifespan?**

a. 70 years
b. 120 years
c. 100 years
d. 40 years

**9. Who was Canaan's firstborn?**

a. Heth
b. Sidon
c. Jebus
d. Amor

**10.What did Noah plant after becoming a man of the soil?**

a. Olive grove
b. Wheat field
c. Fig tree
d. Vineyard

## Children's Quiz Corner - June 2026 Answers

### Genesis: Chapters 1-5

| | |
|---|---|
| 1 | a. It was because the wickedness of man was very |
| 2 | d. When God breathed into the human's nostrils |
| 3 | b. Seth |
| 4 | c. In the cool of the day / in the evening |
| 5 | c. "Am I my brother's keeper?" |
| 6 | d. All of the above |
| 7 | a. He must not eat from the tree of the knowledge of |
| 8 | a. A protective mark so no one would kill him. |
| 9 | c. Hiddekel |
| 10 | a. Because she was the mother of all living people |

# சிறுவர் பகுதி போட்டியில் பங்கேற்றோர்

## Childrens Quiz Corner

| | | | |
|---|---|---|---|
| 1 | B. Timothy Bermin | 13 | S. Johan |
| 2 | Aafreen B. Baron | 14 | Ziyola Linzia |
| 3 | Aashi B Buena | 15 | Akshel Hans A.S. |
| 4 | K. Jovan Fedrick | 16 | Johan Sujin |
| 5 | K. Ferona Katie | 17 | Stebin Linto |
| 6 | Johan Judson | 18 | Arshit H. |
| 7 | Dallin Bryant | 19 | Rohan |
| 8 | S. Bertina | 20 | Roshan |
| 9 | Jefna John | 21 | Fabina Jills |
| 10 | Berniha Stalin | 22 | Joshan Sujin |
| 11 | Jafflin | 23 | Remiro R.P |
| 12 | Jefflin | | |

## Coloring

| | | | |
|---|---|---|---|
| 1 | Chris Bermin | 11 | Jaffrin Hayra |
| 2 | S. Bertina Stalin | 12 | D.J. David Gamaliel |
| 3 | R.P. Evalyn Reeba | 13 | Ellen Deborah |
| 4 | Jaran Judson | 14 | Erin Deborah |
| 5 | C. Jaffrin Hannah | 15 | V.M. Nynika |
| 6 | R.P. Samuel Raj | 16 | Keerthana |
| 7 | Sherah John | 17 | Remijo R P |
| 8 | J.S. Kaariga Jeshal | 18 | Ann Thejas S A |
| 9 | Bertina | 19 | Johan Daniel Charles |
| 10 | V.M. Arika | 20 | Shinona Binora |

# மருத்துவப்பகுதி

## வாட்டி வதைக்கும் வெயில்...

**சர்க்கரை நோயாளிகள் கவனிக்க வேண்டிய விசயங்கள்!**

வெயில் காலத்தில் மற்றவர்களை விட சர்க்கரை மருத்துவப் பயனாளிகள் அதிக பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். வெயில் காலத்தில் சர்க்கரை மருத்துவப் பயனாளிகள் பின்பற்ற வேண்டியவை:

கோடை காலத்தில் மற்றவர்களை காட்டிலும் சர்க்கரை மருத்துவப் பயனாளிகளுக்கு நீரிழப்பு ஏற்படும் அபாயம் அதிகம் உள்ளதால் போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும்.

நீர் சத்து மற்றும் நார் சத்து மிகுந்த காய்கறிகள், பழங்களை அதிகமாக உட்கொள்ள வேண்டும். (எ.கா) வெள்ளரிக்காய், முள்ளங்கி, ஆரஞ்சு, ஆப்பிள், தர்பூசணி, கிர்ணிபழம், மாதுளம்பழம்.

வெயில் காலத்தில் இன்சுலின் உணர்திறன் குறைவதால் இது சர்க்கரையின் அளவை அதிகரிக்கிறது. அதனால் அவ்வப்போது ரத்த சர்க்கரை அளவை பரிசோதனை செய்து பார்த்துக் கொள்வது நல்லது.

பொதுவாக வெயிலில் செல்வதை தவிர்ப்பது நல்லது. வெயிலில் கண்டிப்பாக செல்ல நேர்ந்தால் முகம் மற்றும் தோலில் சன்ஸ்கிரீன் தடவி கொண்டும், பருத்தி மற்றும் காற்றோட்டம் உள்ள ஆடைகள் அணிந்தும், குடை நிழலிலும் செல்வது நல்லது.

ன்சுலின் மற்றும் மருந்துகளின் செயல் திறனை வெப்பம் குறைக்கக் கூடியதால் வெப்பத்திலிருந்து இவற்றை விலக்கி, குளிர்ந்த அல்லது உலர்ந்த இடத்தில் அதனை வைக்கலாம்.

உடற்பயிற்சி அல்லது நடைப்பயிற்சி விடியற்காலை நேரத்தில் அல்லது (இண்டோர்) வீட்டிற்கு உள்ளே செய்வது நல்லது. வெயில் நேரத்தில் நடை பயிற்சி செய்வது தோல் சார்ந்த பிரச்சினைகளையும் ஏற்படுத்தலாம்.

**தவிர்க்கவேண்டிய விசயங்கள்!**

- மது அருந்துதல் கூடாது. ஏனெனில் மதுவில் டையூரிடிக் பண்புகள் (நீரை வெளியேற்றுவது) இருப்பதால் நீரிழப்பை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது.

- எனர்ஜி பானங்கள், பழச்சாறுகள், பாட்டிலில் அடைக்கப்பட்ட குளிர்பானங்களை தவிர்க்க வேண்டும்.

- வெப்பமான சூழ்நிலையில் நடைப்பயிற்சி அல்லது உடற்பயிற்சி செய்ய வேண்டாம். இது வியர்வை மற்றும் இதயத்துடிப்பை அதிகப்படுத்தும்.

- தலைவலி, மயக்கம், தசைபிடிப்பு, வாந்தி போன்ற அறிகுறிகளை உதாசீனப்படுத்தவேண்டாம். அவை வெப்ப சோர்வின் தொடக்கமாக இருக்கலாம்

- எந்த காரணம் கொண்டும் காலணிகள் இல்லாமல் வெளியே செல்லக்கூடாது. முடிந்தால் வீட்டுக்குள்ளேயும் காலணிகள் அணிவது நல்லது.

- எண்ணெயில் பொரித்த மற்றும் காரமான உணவுகளை தவிர்த்து, எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவுகளை உட்கொள்ள வேண்டும்.

**திருமதி. சபிதா அருண்குமார்**

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்

***கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயதுபோலாகிறது* (சங்.103:5)**

| Sl.No | Name | Date of Birth |
|---|---|---|
| 1 | Ms. B. Minnu, D/O. Mr. Byju.J.L | 1 |
| 2 | Ms. R. Jasrin Reena, D/O. Mr. C. Robinson | 1 |
| 3 | Mr. Jairus Prince | 1 |
| 4 | Mrs. Shermily Chella Agnes, W/O. Mr. Melvin Devis | 2 |
| 5 | Ms. J.J. Jafflin, D/O. Mr. D. Justin Singh | 3 |
| 6 | Mr. J.J. Jeffin, S/O. Mr. D. Justin Singh | 3 |

| | | |
|---|---|---|
| 7 | Mr. Aafreen B Baron, S/O. Mr. Binu Kumar | 3 |
| 8 | Mr. P. Paul Priner | 7 |
| 9 | Mr. M. Arokiadoss | 7 |
| 10 | Mr. Rahul Raj K.S | 8 |
| 11 | Mrs. Divsha Stajoe, W/o. Mr. Jairus Prince | 11 |
| 12 | Mrs. P. Johnsy, W/o. Rev. J. Deva Raja Jebastin | 12 |
| 13 | Mrs. C.S. Sujila, W/O. Mr. K. Somu | 14 |
| 14 | Mrs. E. Jeba Bella Gladsily, W/o. Mr. Binu Kumar | 15 |
| 15 | Mr. N. Naolin, S/O. Mr. T. Nepolean | 16 |
| 16 | Mrs. Merin Lincy, W/O. Mr. J. Ponraj | 19 |
| 17 | Mrs. Jenisha, W/o. Mr. Stalin Jose | 22 |
| 18 | Mrs. Pommy, W/O. Mr. Rajan Victor | 22 |
| 19 | Mr. Jaya kumar | 26 |
| 20 | Mrs. Domine Pius, W/O. Mr. P. Paul Priner | 28 |
| 21 | Mr. Rajan Victor | 29 |
| 22 | Mrs. Jaiflora Mercy, W/O Mr. Jaya Kumar | 31 |

## திருமணநாள் வாழ்த்துக்கள்


*வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலே*
*நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் (சங்.115:15)*

| Sl.No | Name | Wedding Day |
|---|---|---|
| 1 | Mrs & Mr. Jaya kumar | 3 |
| 2 | Mrs. & Mr. Stalin Jose Jenisha | 3 |
| 3 | Mrs & Dr. Navin Suthahar | 6 |
| 4 | Mrs & Mr. Ruskin Swamydhas Blessy | 9 |
| 5 | Mrs & Mr. Joie Bency | 10 |
| 6 | Mrs. & Mr. Dennish Keruthika | 11 |
| 7 | Mrs & Mr. Datheesh Mahiba | 11 |

சிறுவர் பகுதி...

**COLOUR THE PICTURE**

(Age 3-9 years)




*R.P. Evalyn Reeba*



## 2026 ஆராதனை ஒழுங்குகள்

இடம்: Hall No. 10 - Union Church

**ஞாயிறு ஆராதனை**
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்
காலை 6:30 மணி

**தூய நற்கருணை ஆராதனை**
மாதத்தின் முதலாம் ஞாயிற்றுக்கிழமை
காலை 6:30 மணி

**உபவாச ஜெபக் கூடுகை**
மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை
காலை 11:00 மணி

**வீட்டு ஜெபக் கூடுகை**
மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை
இரவு 7:00 மணி

**துதி ஆராதனை**
மாதத்தின் நான்காம் ஞாயிற்றுக்கிழமை
காலை 6:30 மணி

**பாடல் ஆராதனை**
மாதத்தின் ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை
காலை 6:30 மணி

**திருமறைப் பள்ளி வகுப்பு**
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்
காலை 7:00 மணி

**பெண்கள் ஐக்கிய சங்கம்**
இரண்டு மற்றும் நான்காம்
ஞாயிற்றுக்கிழமை காலை 7:45 மணி

**பாடகர் குழு பயிற்சி**
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை
காலை 9:00 மணி

**ஜெப கூடுகை**
ஒவ்வொரு புதன்கிழமையும்
இரவு 8:00 மணி


THAT THEY MAY HAVE LIFE · KANYAKUMARI DIOCESE C.S.I.

**SHARJAH TAMIL CONGREGATION (CSI KANYAKUMARI DIOCESE)**

P.O. BOX : 36378, Sharjah, U.A.E. TEL. : 06-5680727, Mobile : 050-936 7576